மலர்-4 இதழ்-86 மார்ச் 16-31 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



ஆன்மிகமலர்
mobile app
GET IT ON
Google Play

இலவச
e- book

சிந்திக்கவைத்த
கொரானா

# வைரஸ் கிருமிகளை அழிக்கும் கோயில் வழிபாட்டு முறைகள்

## மனித உடலும் கோபுரமும்

கோவில் கோபுரத்தை மனிதன் தன் உடலோடு ஒப்பிட வேண்டும் என்பதற்கே இறைவன் குடியிருக்கும் இடத்தில் மனித உடலில் உள்ள அனைத்தையும் சேர்த்து உருவாக் கப்பட்டதுதான் கோபுரம்.

உடலே கோயில் உயிரே தெய்வம். உடல்அமைப்பைதான் கோயிலாக அமைத்துள்ளார்கள். நம் உடல் இரண்டு செல்கள் சேர்ந்து குட்டி போட்டு குட்டி போட்டு, உடல் உறுப்புகள் அனைத்தும் உருவானது. இப்படி ஒரே இனம் மீண்டும் மீண்டும் சேரும்போது வேறு வேறு உறுப்புகள் உருவானது அல்லவா. இந்த காரணத்தினால்தான் மனிதனை ஒரே உறவுக்குள் திருமணம் செய்யக்கூடாது என்றார்கள் (எ.கா. அண்ணனும் தங்கையும்). ஒரு சராசரி மனிதனின் உடலில் உள்ள செல்களின் எண்ணிக்கை முப்பது முக்கோடி (மூன்றுக்கு அருகில் இருபத்தி இரண்டு ஜீரோ சேர்த்தால் அதற்கு முப்பது முக்கோடி 3000000000000000000000இதையே முப்பதுமுக் கோடி தேவர்கள் நம்மை காப்ப தாக சொல்வார்கள் (செல்கள் கூட்டாக இருப்பதால் தான் உடல் உடலாக உள்ளது). இதை புரிய வைக்க கோபுரம் முழுவதும் சிலைகளால் அமைக்கப்பட்டிருக்கும். இந்த தேவர்களுக்கு (செல்களுக்கு) கெடுதல் செய்யும் கிருமிகளை அசுரர்கள் என்பர்.



இவ்வாறான கோபுரத்தில் உள்ளசிற்பங்களில் சில ஆபாசம் இருக்கு, இந்த ஆபாசம் கூட மனித உடல்களும் இவ்வாறு அமைத்துள்ளது என்பதை புரியவைப்பது. செல்கள் இனப்பெருக் கம் செய்துகொண்டே இருப்பதால்தான் உடல் நிலைபெற்று இருக்கிறது.

## உலகை காக்கும் எட்டு யானைகள்

உலகத்தை எட்டு திசைகளாக பிரித்து, எட்டு திசைகளையும் எட்டு விதமான கஜங்கள் தாங்கி நிற்பதாக நமது வேதங்கள் கூறுகின்றன. கஜங்கள் என்றால் யானை என்று பொருள் படும். அந்த வகையில் எட்டு யானைகளுக்கும் எட்டுப் பெயர்கள் உள்ளன. எட்டு திக்குகளையும் (திசைகள்) தாங்கி நிற்கும் கஜங்களை 'அஷ்ட திக் கஜங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

அந்த கஜங்களின் பெயர்களைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| கிழக்கு | – | ஐராவதம் |
| தென்கிழக்கு | – | புண்டரீகம் |
| தெற்கு | – | வாமனம் |
| தென்மேற்கு | – | குமுதம் |
| மேற்கு | – | அஞ்சனம் |
| வடமேற்கு | – | புஷ்பந்தம் |
| வடக்கு | – | சர்வ பௌமம் |
| வடகிழக்கு | – | ஸூப்ர தீபம் |

– ஆதாரம் சர்வ வித்யானாம் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவ முபாஸ்மஹே



கங்கை கொண்ட சோழபுரம்:

இங்குள்ள மூலஸ்தான மூர்த்திக்கு இலிங்கத் திருஉருவைச் சுற்ற 15 முழமும், ஆவுடையார்க்கு 54 முழமும் பரிவட்டம் வேண்டும்.

திருப்புனவாயில்:

இத்தலத்து மூல லிங்கம் மிகப் பெரியது. இலிங்க வடிவிற்கு மூன்று முழப் பரிவட்டமும், ஆவுடையாருக்கு முப்பது முழம் பரிவட்டமும் தேவை "மூன்று முழம் ஒரு சுற்று; முப்பது முழமும் ஒரு சுற்று"என்பது பழமொழி.

பெரிய நந்தி:

தஞ்சை நந்தி மிகப் பெரியது தான். அதனி னும் பெரியது லேபாட்சி வீரபத்திரர் சுவாமி கோயிலில் உள்ள நந்தியாகும். இந்த நந்தி இன்றும் வளர்ந்து வருவதாக கூறப்படுகிறது.



## பெரிய நந்தி பெரிய சிவன்

## வைரஸில் இருந்து காக்கும் முன்னோர் வழி

வாழ்க்கையில் ஒருசில வழிமுறைகளை நம் முன்னோர்கள் மிக அழகாக, நேர்த்தியாக வழி முறைப்படுத்தி வைத்துள்ளனர். அவர்கள் வாழ்ந்து அனுபவித்ததில் நல்ல வற்றையெல்லாம் தொகுத்து, இப்படி வாழ்ந் தால் வாழ்க்கை இனி மையாக இருக்கும் என்பதை வழிபாட்டு முறை, சம்பிரதாயம், சாங்கியங்கள் போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்தினர்.

அந்த வகையில் மனித உடலை பாதுகாப் பாக வைத்திருக்க ஒருசில வழிமுறைகளை கூறியுள் ளனர். அவற்றை பார்ப்போம்.

1. இரு கை கூப்பி வணக்கம் சொல்லியது.
2. வெளியே சென்றுவந்தால் கால் கழுவி பிறகு வீடுநுழைவது.
3. பெண்கள் மஞ்சள் பூசி குளிக்க சொல் லியது, கிராம விழாவில் மஞ்சள் கலந்த நீர் தெளித்து விளையாடியது.
4. உணவில் மிளகு சுக்கு மஞ்சள் சேர்ந் தது.
5. வேப்பங்குச்சி உப்பு கொண்டு பல் துலக்கியது.
6. மாட்டுச் சாணம் தெளித்து வாசல் பெருக் கியது.
7. வருடம் ஒரு முறை வீட்டிற்கு சுண் ணாம்பு அடித்தது.
8. மாலை நேரம் வீட்டில் சாம்பிராணி ஏற்றி புகை போட்டது.
9. எலுமிச்சம் பழம், காய்ந்த மிளகாய், படிகாரம், உத்திரசங்கு இவைகளை வாச லில் தொங்க விட்டது.
10. மரண நிகழ்ச்சிகளுக்கு சென்றுவந்தால், கூட்டம் நிறைந்த இடங்களில் இருந்து திரும்பியதும் உடைகளை கழற்றி வீட்டிற்கு வெளியே வைத்தது. பின்வாசல் வழியாக சென்று குளித்துவிட்டு வீட்டில் நுழைந்தது.
11. வெற்றிலை பாக்கு போடுவதும்
12. கசாயம் குடிப்பதும்
13. வெள்ளாவியில் உடை வெளுத்தது

இதுபோன்ற பல வழக்கங்களை நம் முன்னோர் கடைபிடித்தனர், ஆனால் நாம் அதை மறந்து விட்டதால்தான் சிறு வைரஸ் கிருமிக்கு கூட அஞ்சி நிற்கிறோம்.



# பசுக்களை கொண்டாடிய முன்னோர்களின் அறிவியல்

இந்துக்கள் பசுக்களை வெறும் விலங்காக பார்க்காமல், தெய்வத்துடன் போற்றி வழிபட்டு சிறப்பித்தனர்.

அதைப்போன்றே, பசுவையும், பசுமூலம் கிடைக்கும் மதிப்பு கூட்டப்பட்ட பொருளான, தயிர், மோர், நெய், வெண்ணைய், சாணம், கோமியம் போன்ற வற்றிற்கு தனிப்பட்ட மரியாதையுண்டு.

இவற்றை மூலப்பொருளாக வைத்து செய்யப் படும் பஞ்சகவ்யம் மிகச்சிறந்த உரமாகவும், பூச்சிகொல்லி மருந்தாகவும், சித்தா, ஆயுர் வேதா போன்றவற்றில் தேவ மருந்தாகவும் பயன் படுத்தப்படுகின்றனர்.

இவ்வளவு மதிப்பு மிக்க பசுக்களை உலக நாடுகளிலேயே போற்றி வணங்கும் ஒரே நாடு இந்தியா மட்டும்தான். அதே சமயம் பசுக்களின் மதிப்பு தெரியாத நாடுகளின் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பது சீனா.

ஆசியாவின் நோயாளி என சீன தேசத்தைத் தான் சொல்வார்கள், சீனாவில் மட்டும் பல்வேறு நோய்கள் எளிதாக பரவுவதற்கு காரணம் இல்லா மல் இல்லை, கண்டதை சாப்பிடும் மக்கள்இருந் தாலும், முக்கிய உணவு முறைகள் அங்கு இல்லை.

குறிப்பிட்ட நோய்கள் ஏன் பரவுகின்றன என கேள்வி எழுப்பினால், அங்கு மாட்டு இறைச்சியை சாப்பிடும் மக்கள், மாட்டின் மூலம் கிடைக்கும் பொக்கிஷங்களை உண்பது இல்லை.

சீனர்கள் உணவியலிலும் வாழ்வியலிலும் பசு மாட்டுக்கு முக்கியத்துவம் கிடையாது. பாலோ நெய்யோ தயிரோ அவர்கள் பெரும்பாலும் அறியாதவையாக உள்ளது.

அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் பன்றி, கோழி, வாத்து, நண்டு இன்னும் பல நடப்பன ஊர்வன பறப்பன, மாடுகள் மிக குறைவு, அதன் பயன்பாடும் பாலும் மிக மிக அரிதானவை, 4 பசு கொடுத்தாலும் வெட்டி சூப் வைப்பார்களே தவிர பால் கறக்கவோ தயிர் கடையவோ தெரியாது.

அவர்கள் உணவே வேறு, எலும்புக்கு வலு வூட்டுமோ தவிர வேறு ஒன்றும் செய்யாது. மாமிச சூப் சில கீரைகள், மீன்கள் மற்றும் கிடைப்பவை எல்லாம் எனும் ஒருமாதிரி சூப் சாப்பாடு அது.

அதில் பாதியோ மீதியோ கூட வெந்திருக்காது, மசாலா என்பதோ தேங்காய் என்பதோ சேராது.

இதே உணவு பாரம்பரியமே சீனா, ஜப்பான், கொரியா, ஹாங்காங் என பல நாடுகளில் அந்த இனமக்கள் வாழும் நாட்டில் உண்டு.

பன்றி, நண்டு, வாத்து, ஆற்று மீனுமே பிரதானம், கோழி கூட இப்பொழுது வந்ததே ஆம் உலகம் அறுதியிட்டு சொல்கின்றது பசுமாடு புழங்கும் இடங்களிலும், மாட்டுசாணம் பூசபடும் இடங்களிலும் தொற்றுநோய் வாய்ப்புகள் குறைவு

நெய் பிரதான நோய் எதிர்ப்பு உணவு இதைத் தான் "நெய் இல்லா உண்டிபாழ்" என சொன்னது தமிழகம். வடக்கே சப்பாத்தியில் நெய் ஊற்றாமல் உண்ணகூடாது என்பது தத்துவம்.

மேற்காசியாவில் நெய் பயன்பாடு இல்லை எனினும் தயிரும் வெண்ணையும் பிரதான உண வுகள்.

ஒருமனிதன் வெண்ணெய் உண்பது நல்லது என்பது மருத்துவ உலகம் சொல்லும் உண்மை, இந்துக்கள் கண் ணன் முதல் ஆஞ்சநேயர் வரை வெண்ணைய் படைத்து வைத்து உண்ணும் தத்துவம் இதுதான்.

மேற்கத்தியவர்கள் காலை உணவில்கட்டாயம்சில துண்டு வெண்ணெய் அல்லது பாலாடை இருக்கும். பசுவும் அது கொடுக்கும் பொருளும் சாதாரணம் அல்ல, அவை நோய் முதல் பல விஷயங்களை விரட்டி ஆரோக்கியம் கொடுக்கும்.

அதை அணு அணுவாக உணர்ந்த தேசமிது, அதனால்தான் பால் தயிர் நெய் என அதன் பயன் பாடு ஆலயம் முதல் எல்லா இடத்திலும் அதிகம், மருந்தில்லா நோய்களும் பரவாது.

அக்காலத்தில் வீட்டுமுற்றத்தில் சாணம் தெளிக்கும் தத்துவமே கிருமி நாசினி என்பதாகும், சாணத்தில் ஹோமியமும் கலந்திருந்தது.

பால் அருந்துவது இந்து பண்பாடு, பிறப்பு முதல் இறப்பு வரை பாலே பிரதானம். பாலும் பழமும் என்பதெல்லாம் இந்திய அடையாளத்தில் ஒன்று.

அதை கடைசிவரை மாற்ற முடியா வெள்ளையன் பாலில் டீ அல்லது காபி தயாரித்து தன் வியாபாரத்தை நடத்தினான், பாலில் டீ கலக்கும் காபி கலக்கும் பாணி இந்தியாவிலே பிர தானம்.ஆனால் சீனாவில் மட்டும் ஏன் வித வித நோய் உருவாகின்றது என்பதற்கும், சீன இனங்கள் ஏன் அடிக்கடி சிக்குகின் றது என்பதற்கும் உலகம் கண்ட விஷயங்களில் ஒன்று அவர்களிடம் பசுமாட்டு வளர்ப்பும் பால் பொருட்கள் உபயோக மும் அதிகம் இல்லை என்பதே.



பசுவினை அர்த்தமில்லாமல் இத்தேசம் கொண்டாடவில்லை, கோமாதா என கொண்டாடி கண்ணன் அருகில் நிறுத்தியதிலும், அவன் வெண்ணெய் தின்றான் என சொன்னதிலும் அர்த்தமில்லாமல் இல்லை.

**கண்ணன் மாடுமேய்ப்பவனாக வந்ததிலும் தத்துவம் இல்லமால் இல்லை. சிவனுக்கு வாகனமாக காளையினை வைத்ததிலும் அர்த்தம் இல்லாமல் இல்லை.**

வழிபாடு முதல் வீடுவரை நெய்யும் தயிரும் பாலும் புழங்க சொன்னதிலும், ஒருபிடி சாணத்தை பிள்ளையாராக வாசலில் வைக்க சொன்னதிலும் விஞ்ஞானமும் ஆரோக்கியமும் இல்லாமல் இல்லை. அன்றே மிக பெரும் உணவு பாதுகாப்பு மற்றும் நோய் எதிர்ப்பு முறை பசுவில் இருப்பதை கண்டுபிடித்த நம் மூதாதையர்கள் பசுவிற்கு முக்கியத்துவம் கொடுத்தை இன்று உலகமே திரும்பி பார்க்கிறது.

# தீய கதிர்களை தடுக்கும் பட்டு

பட்டு துணிகளுக்கும் பட்டிற்கும் இயற்கையாகவே ஒரு குணம் உண்டு. அதாவது பட்டிற்கு எளிதில் சில நல்ல வகையான கதிர்களை தக்க வைத்துக் கொள்ளும் சக்தியும் தீய கதிர் வீச்சுகளை (நோயாளிகளின் சுவாசம், ஓசோன் படலத்தில் இருந்து வரும் அசுத்த கதிர்கள்) தடுத்து உள்ளிருக்கும் உடலிற்கு வலிமை அளிக்கும்.

இதை கருத்தில் கொண்டுதான் திருமணம் போன்றசுப நிகழ்ச்சிகளில் பட்டுப்புடவை, பட்டு வேட்டி, பட்டு சட்டை போன்றவற்றை அணியும் வழக்கத்தை ஏற்படுத்தினர் நம் முன்னோர்.



திருமணவீட்டிற்கு பல தரப்பட்ட எத்தனையோ பேர் வருகின்றனர். அதில் யார் எந்த நோய் தொற்று உள்ளதோ என்பதை யாரும் அறிய மாட்டார்கள். எனவேதான் மணப்பெண்ணிற்கும் மணமகனுக்கும் ஆரோக்கியமான வாழ்வு வேண்டும். தொற்று நோய் பரவக் கூடாது என்பதற்காகவே பட்டுத் துணியை அணிகின்றனர். இதை சில நாடுகளும் தற்பொழுது ஆராய்ச்சி செய்து கொண்டு வருகின்றது.

கோவில்களுக்கு செல்லும்பொழுது பட்டுத் துணியை அணிந்து சென்றால் நல்ல கதிர் வீச்சுகளை உடலில் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

திருமண சடங்குகளில் மற்றும் கோவில்களில் ஒலிக்கப்படும் மந்திரங்கள் இந்த பட்டு நூல்களால் கிரகிக்க பட்டு அதன் மின் அதிர்வுகள் நம் உடலில் பரவும் போது உடலிற்கும் மனதிற்கும் நன்மை ஏற்படும்.

அக்காலத்தில் பட்டுத்துணி வாங்க முடியாதவர்கள், பருத்தியில் செய்யப்பட்ட துணியில், மஞ்சள் தடவிஅணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். திருமணம், கோவில் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது வெள்ளை துணியில் மஞ்சள் தடவி அணிந்து செல்வ வழக்கமாக கடைபிடித்தனர். வெள்ளை துணியை மஞ்சளில் தோய்த்து அணிவாதால், பட்டு நூல் தரும் பயனை இந்த மஞ்சள் தந்து விடும். கோவிலுக்கு செல்லும்போது அவசியம் பட்டு துணியை அணிந்து செல்வதை வழக்கமாக கொள்வோம்.



# சிவ சக்தியின் நர்த்தன நடனமே அணுவினுள் உண்டாகும் மாற்றத்திற்கு காரணமாகிறது

பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு அணுவும் எவ்வாறு மின்காந்த மயமாகி கொண்டிருக்கின்றன என்று பார்த்தோமானால், இப்பிரபஞ்சத்தில் ஒவ்வொரு அணுவும் மின்காந்த மயமாகி கொண்டு செயல்படும்போது ஒவ்வொரு அணுவும் ஒன்றை ஒன்று ஈர்த்து கொண்டும் விலக்கி கொண்டும் இருக்க வேண்டியது தானே என்ற கேள்வி எழலாம். அதற்கான பதில் இதோ,

ஒவ்வொரு அணுவும் சுழலும் போது பகலில் ஒளியை உள்வாங்கி மின்கலனில் சேமிப்பது போல சேமித்து இரவினில் ஒளியை இப்பிரபஞ்சத்தில் விடுகிறது.

இந்த செயல் தொடர்ந்து நடைபெற்று கொண்டே இருப்பதாலும், பல யுகங்கள் கடந்தும் ஒவ்வொரு அணுவும் ஒவ்வொரு வேகத்தில் சுழன்று வருவதாலும், ஒளி மூலங்களிலிருந்து இருக்கும் தொலைவு வித்தியாசங்கள் காரணமாகவும், ஒவ்வொரு அணுவிலும் ஒவ்வொரு விதமான கிரவிட்டி எனும் ஈர்ப்பு சக்தி இருக்கிறது.

ஆனால், தொடர்ச்சியாக ஒரே மாதிரியான, ஆற்றலை பெற்றும், இழந்தும் வரும் அணுக்கள் மாற்றம் அடைவதில்லை.



எப்போது, ஒரு அனுவின் ஆற்றல் பெறும் விகிதம் மாறும்போதும், அல்லது இழக்கும் ஆற்றல் மாறும் போதும் அணுவின் நிலை மாறுபடுகிறது. அது மட்டும் இல்லாமல் ஓர் அணுவில் உள்ள எலக்ட்ரான்கள், எத்தனை ஆர்பிட்டுகளில், எத்தனை எலக்ட்ரான்கள் எத்தனை எண்ணிக் கையில் சுழன்று வருகிறதோ அதற்கேற்ப அணுவின் பண்பு மாறுபடுவதாக நடைமுறை அறிவியல் கூறுகிறது.

ஒரு மின்காந்த தன்மையுள்ள ஒருபொருள் வெப்பமாதல் தன்மையையும், மின்காந்த அலைகளையும், மின்காந்த கதிர் வீச்சின் தன்மையையும், மின் காந்த புலத்தினையும்பெற்றிருக்கும். ஆக, அணுவிலுள்ள இருப்பு சக்தியான மின்காந்த சக்தியான சிவ சக்தியின் ஒத்துழைப்பு மற்றும் கட்டளை உள்ள போது தான் மாற்றம் என்ற ஒன்று உருவாகிறது.

ஏனெனில், அப்போது தான் எலெக்ட்ரான் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு தாவும். இதனால் தான் மின்சாரமும் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு பாய்கிறது.

அணுவினுள் இந்த மின்காந்த சக்தியான சிவ சக்தியின் நர்த்தன நடனமே அணுவினுள் உண்டாகும் மாற்றத்திற்கு காரணமாகிறது.

– கார்த்திக்

தொ.பே.எண். 9944084969

# திருப்பதி வெங்கடாஜலபதி அடிவாங்கிய கடப்பாரை




திருவரங்கத்தில் திருவரங்கப் பெருமானின் கைங்கர்யத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஸ்ரீராமாநுஜருக்கு, நீண்டகாலமாகவே ஒரு குறை இருந்துவந்தது. 'நாம் திருவரங்கத்தில் நந்தவனமும், தபோவனமும் அமைத்துக்கொண்டு பெருமாளின் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக் கிறோம்.

ஆனால், 'சிந்துப்பூ மகிழும் திருவேங்கடம்' என சதா சர்வகாலமும் பாடிப் புகழும் வேங்கட முடையானுக்கு இப்படி ஒரு நந்தவனமும் தபோவனமும் அமைக்க முடியவில்லையே' என்பதுதான் அவருடைய ஆதங்கம்.

அதை ஒரு நாள், தமது சீடர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது தெரிவித்தும் விட்டார். தெரிவித்ததோடு நில்லாமல், 'உங்களில் எவர் வேங்கடவனின் கைங்கர்யத்துக்கு அனு தினமும் மாலை தயாரித்துத் தரும் வேலையை எடுத்துக்கொள்ளப் போகிறீர்?' எனக் கேட்கவும் செய்தார்.

ஆனால், பசுஞ்சோலைகளும் மருதாணிப் பூக்களும் செழித்துக் கிடக்கும் காவிரிக்கரையில் நீராடிவிட்டு, அரங்கனைத் தொழும்போது கிடைக் கும் சுகானுபவம் வேறெங்கு கிடைக்கும் என்ற எண்ணத்தில் எவரும் வாய் திறக்கவில்லை.

'குருவின் மனக்குறையைப் போக்குபவர் உங்களில் எவருமில்லையா?' என்ற மறுபடியும் ஆச்சர்யத்துடன் பார்த்தார்.

அப்போது ஒற்றை ஆளாக எழுந்து நின்றார் அனந்தாழ்வான், கண்களில் வைராக்கியம், உதட்டில் புன்முறுவல், அனந்தாழ்வானை வாரி அணைத்து உச்சி முகர்ந்து திருமலைக்கு அனுப்பி வைத்தார்.

ஏழுமலை ஆண்டவனுக்கு 'திருமாலை சேவை' செய்யும்பேறு தனக்குக் கிடைத்த மகிழ்ச்சியோடு தனது மனைவியுடன் அவரும் திருமலைக்கு வந்து சேர்ந்தார்.

முன்னதாகவே அங்கே வந்து சேர்ந்திருந்த ராமாநுஜரின் தாய்மாமனான, திருமலை நம்பி அவரை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தார். 'அனந்தாழ்வா, உனக்கு குடிசைபோட்டுத் தருகிறேன். மேலும் நந்தவனம் அமைக்கவும் ஏற்பாடு செய்கிறேன். முதல் காரியமாக பெருமாளை வணங்கிவிட்டு வந்து உணவு அருந்துங்கள். களைப்பு தீர ஓய்வு எடுங்கள். நாளை முதல் உங்கள் பணியை ஆரம்பிக்கலாம்' என்றார். அனந்தாழ்வானும் அவரது மனைவியும் அப்படியே செய்தனர்.

திருமலையில் குடிசை ஒன்றைக் கட்டினார். அதனருகே நந்தவனம் அமைத்தார். மண்வெட்டி யால் வெட்டி நிலத்தைப் பண்படுத்தி பூச்செடி களை நட்டார். அந்த நந்தவனத்துக்கு தமது குருநாதரின் திருப்பெயரே நிலைக்கும்படி 'ராமாநுஜ நந்தவனம்' என்று பெயரும் வைத்தார்.

இப்போதும் அந்த நந்தவனம் அதே பெயரிலேயே அழைக்கப்படுகிறது.

மழைக்காலத்தில் செடிகள் பூத்துக் குலுங் கின. தண்ணீர் பிரச்னை எழவில்லை. கோடைக் காலத்தின் தண்ணீர்த் தேவைக்காக குளம் வெட்டி அதில் தண்ணீரைத் தேக்க முடிவு செய்தார். இச்சமயம் அவரது மனைவி கர்ப்பம் தரித்திருந்தார்.

நந்தவனம் அருகே சிறுபள்ளம் இருந்தது. அந்தப் பள்ளத்தில் ஒரு பகுதியை மேடாக்கினார். குளத்தின் ஒரு பக்கத்தை மட்டும் மண்இட்டு உயரமாக நிரப்பி, பள்ளத்தை ஆழப்படுத்தினார். 'நானும் உங்களுக்கு உதவுகிறேன்' என குளம் வெட்டும் பணியில் மனைவியும் சேர்ந்து கொண்டார்.

மண்ணை ஒரு புறமிருந்து மறுபக்கம் கொண்டு சென்று மனைவி கொட்டிவிட்டு வந்தார். அப்போது அவர் கருவுற்று இருந்தார். ஒரு கர்ப்பிணிப் பெண் மண் சுமந்து செல்வதைப் பார்த்த ஒரு சிறுவன், அவருக்குத் தானும் உதவுவதாகக் கூறினான்.

ஆனால், அனந்தாழ்வானோ, 'நம்மால் ஊரார் பிள்ளை எதற்கு சிரமப்பட வேண்டும் என்று நினைத்தவராக, அந்தச் சிறுவனைப் பார்த்து, 'உன் வேலை எதுவோ அதைப் போய் செய்' என்று அனுப்பிவிட்டார்.

தனக்குக் கூலி எதுவும் வேண் டாம் என்று சிறுவன் கூறியும், அனந்தாழ்வான் மறுத்து விட்டார். பெருமாளின் கைங்கர்யத்தில் தானும் தன் மனைவியும் மட்டுமே ஈடுபடவேண்டும் என்று நினைத்தார். அதனாலேயே அந்தச் சிறுவனை தன் திருப்பணியில் சேர்த்துக்கொள்ள வில்லை. ஆனாலும், கர்ப்பிணிப் பெண் கஷ்டப் பட்டு மண் சுமப்பதைப் பார்த்து அந்தச் சிறுவன் மிகவும் வருந்தினான்.

எனவே, 'வேலை செய்ய கூலியே வேண்டாம். நான் மண் சுமக்கிறேன். மண் சுமந்த புண்ணியம் தங்கள் மனைவிக்கே கிடைக்கட்டும்' என்றான் சிறுவன். 'பாவ புண்ணிய விஷயங்களில் சிறு பையனான இவன் தனக்கு புத்திமதி சொல்கி றானே என ஆத்திரமுற்ற அவர் 'அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசாமல் போய்விடு. கண் டிப்பாக இவ்விஷயத்தில் நீ தலையிடாதே' என்று சிறுவனைக் கடிந்துகொண்டு அங்கிருந்து அனுப்பினார்.

சற்று வளைவான பாதையில் சென்று மண்ணைக் கொண்டுபோய் கொட்ட வேண்டி யிருந்ததால், மனைவி அங்கு சென்று மண்ணைக் கொட்டி விட்டு வந்தார். அனந்தாழ்வான் இந்தப் பக்கம் மண் தோண்டினார். வளைவுக்கோ அதிக தூரம் இருந்தது. என்ன ஆச்சர்யம். அவர் போகச் சொன்ன சிறுவன் போகாமல், அந்தப்பக்கத்தில் கூடையுடன் நின்றிருந்தான்.

"தாயே, நான் மண் சுமந்தால்தானே அவர் கோபப்படுவார். அவருக்குத் தெரியாமல் உங்களுக்கு உதவுகிறேன். இந்த வளைவுக்கு இந்தப் பக்கம் நான் சுமக்கிறேன். அந்தப்பக்கம் நீங்கள் சுமந்து வாருங்கள் "என்றான் சிறுவன். சிறுவனின் கெஞ்சல் மொழியைக் கேட்ட பிறகு அவளால் மறுக்க இயலவில்லை.

'சரி, தம்பி' என்று கூடையை மாற்றிக் கொடுத்தாள். சற்றுநேரம்



இப்படியே வேலை நடந்தது. திடீரென்று அனந்தாழ்வானுக்கு சந்தேகம் தோன்றியது. 'மண்ணைக் கொட்டிவிட்டு சீக்கிரம் சீக்கிரமாக வந்து விடுகிறாயே' என்று மனைவியைக் கேட்க, "சீக்கிரமாகவே சென்று போட்டு விடுகிறேன் சிரமம் இல்லை"என்று பதில் சொல்லி சமாளித்தாள்.

சிறிது நேரம் சென்றதும், அனந்தாழ்வான் கரையைப் பார்க்க வந்தார். சிறுவன் கர்மசிரத்தையாக மண்ணைக் கொண்டு போய் கொட்டிக்கொண்டிருந்தான். தன்னை அவர் கவனிப்பதைக்கூட பொருட்படுத்தாமல் சிறுவன் தன் பணியைச் செய்தவாறு இருந்தான்.

இதனால், கோபம் தலைக்கேற கடப்பாரையால் சிறுவனின் கீழ்த்தாடையில் அடித்தார். சிறுவனின் தாடையில் இருந்து ரத்தம் கொட்டியது. கடப்பாரையால் அடிபட்டு ரத்தம் பெருகிய நிலையில், அந்தச் சிறுவன் ஓடிப்போய்விட்டான்.

அவசரப்பட்டுத் தான் சிறுவனை ரத்தம் வரும்படி அடித்துவிட்டோமே என்ற வருத் தத்தில் அனந்தாழ்வானுக்கும், தொடர்ந்து வேலை செய்யப் பிடிக்கவில்லை. குடிசைக்குத் திரும்பிவிட்டார். மறுநாள் காலை திருமலை பெருமாளுக்கு அர்ச்சனைகள் செய்யவந்த அர்ச்சகர்கள் கதவைத் திறந்ததும் அலறினர். பெருமாளின் தாடையிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. 'அர்ச் சகரே பயப்படவேண்டாம். அனந்தாழ் வாரை அழைத்து வாருங்கள்' என ஒரு அசரீரி கேட்டது. உடனே அவரை அழைத்து வந்தனர்.



பெருமாள் தாடை யில் ரத்தம் வடிவதை அனந்தாழ்வான் கண்டார். ஆனால், அவருக்கு மட்டும், தான் மண்சுமந்த கோலத்தைக் காண்பித்தார் பெருமாள்.

''சுவாமி, என்னை மன்னித்து விடுங்கள். தங்கள் தொண்டுக்கு அடுத்தவர் உதவியை நாடக்கூடாது என்ற சுயநலத்தில் சிறுவனை விரட்டினேன். அவன் வலிய வந்து மண் சுமந்ததால் வந்த கோபத்தில் அடித்தேன். அந்தச் சிறுவனாக வந்தது தாங்கள்தான் என்று தெரியாது. சுவாமி என்னை மன்னித்தருள்க" என்று விழுந்து வணங்கினார் அனந்தாழ்வான்.

'அனந்தாழ்வா, நீ மலர்மாலை நேர்த்தியாகத் தொடுத்து அணிவிப்பதில் எனக்கு மகிழ்ச்சி. ஆனால், கர்ப்பிணியான உன் மனைவி மண் சுமப்பதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பக்தர்களின் கஷ்டத்தைப் போக்கத்தான் நான் இங்கு இருக்கிறேன். என் பக்தை கஷ்டப்படுவதைக் கண்டு வேடிக்கை பார்க்க என் மனம் எப்படி இடம் கொடுக்கும்"என்று அசரீரியாகக் கேட்டார்.

"கருணைக் கடலே! உன் அருளே வேதனை போக்கும். கஷ்டம் துடைக்கும். என்னை மன்னியுங்கள் சுவாமி" என்றார். பெருமாளோ மோகனமாக தனக்கே உரிய புன்னகையை உதித்தார். 'சரி ' ரத்தம் வழியாமல் இருக்க என்ன செய்வது?' என்று அர்ச்சகர்கள் குழம்பினர். 'சுவாமியின் தாடையில் பச்சைக்கற்பூரத்தை வைத்து அழுத்துங்கள் ரத்தம் வழிவது நின்றுவிடும்' என்றார்.

அர்ச்சகர்களும் மூலவரின் கீழ்தாடையில் பச்சைக் கற்பூரத்தை வைக்க, ரத்தம் வழிந்தது நின்று போனது. இதைநினைவுபடுத்தும் விதமாகவே திருப்பதிப் பெருமாளின் தாடையில் பச்சைக் கற்பூரம் வைக்கும் நிகழ்ச்சி இன்றளவும் தொடர்கிறது.

பெருமாளுக்கு ரத்தம் வர அளவுக்கு அடித்த அந்த கடப்பாரை, இன்றும் திருமலையில் திருவேங்கடமுடையானின் கோவில் நுழைவாயிலில் இன்றும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

திருப்பதி திருமலைவாசனை தரிசிக்கச் செல்லும்போது, பிரதான வாசலின் வலப் புறத்தில், ஒரு கடப்பாரை தொங்குவதைப் பார்க்கலாம். இதுவரை பார்க்காதவர்கள் இனிமேல் செல்லும்போது அந்த கடப்பாரையை அவசியம் பாருங்கள்.



எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play
உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# பெரியவர்கள் காலில் விழுந்து ஆசி வாங்கினால் ஆயுள் கூடும்



அஸ்வத்தாமன், மகாபலி, வியாசர், அனுமன், விபீஷணன், கிருபாச்சாரி, பரசுராமன், மார்கண்டேயன் ஆகியோர் சப்த சிரஞ்சீவிகள் எனப்படுவர்.

மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றிருந்தாலும், இவர்கள் பூத உடல் இன்றி ஆன்மாவுடன் இன்றும் உலகில் உலவிக்கொண்டு தானிருக்கிறார்கள்.

இந்த சிரஞ்சீவிகளில் மார்கண்டேயன் சிரஞ்சீவியான வரலாறு மிகுந்த சுவாரஸ்யம் வாய்ந்தது. மார்க்கண்டேயனை காக்க சிவனே தோன்றியதுதான் மிகுந்த சிறப்பிற்கு காரணம்.

எமனுக்கு பயந்து 12 வயதே நிரம்பிய இந்த பாலகன் சிவபெருமானிடம் தஞ்சம் புகுந்ததும், பின்னர் சிவபெருமான் பிரத்யட்சமாகி காலனை காலால் உதைத்து மார்க்கண்டேயனை காத்தருளியதும் பல்வேறு புராணங்கள் வாயிலாத அறிந்திருப்போம்.

மார்கண்டேயனுக்கு மட்டும் அது எப்படி சாத்தியமாயிற்று என்று தெரியுமா?

இதன் பின்னணியில் நமக்கெல்லாம் மிகப் பெரிய செய்தியை உலகிற்கு சொல்லியுள்ளனர் நமது முன்னோர்.

மார்கண்டேயனுக்கு 12 ஆவது வயதில் மரணம் சம்பவிக்கும் என்றும் அவனுக்கு அல்பாயுசு தான் என்றும் அவன் தந்தையான மிருகண்ட மகரிஷிக்கும் தெரியும்.

ஆகையால் மகனை காக்க விரும்பிய மிருகண்ட முனிவர், அவனுக்கு உபநயனம் செய்வித்த பின்னர், “பெரியோர்கள் எவரை சந்தித்தாலும் தயங்காது அவர்கள் காலில் விழுந்து நமஸ்கரித்து அவர்களது ஆசிகளை பெற்று வருவாயாக” என்று பணித்தார்.

மார்கண்டேயனும் அதே போல தான் பார்க்கும் பெரியவர்கள் காலில் விழுந்து விழுந்து ஆசி பெற்று வந்தான்.

சப்த ரிஷிகள் ஒருமுறை மிருகண்ட முனிவரின் ஆஸ்ரமத்திற்கு வந்தபோது, மார்கண்டேயன் இவ்வாறு அவர்களிடம் வீழ்ந்து ஆசி பெற, அவர்களும், “தீர்க்கா யுஷ்மான் பவ” என்று வாழ்த்திவிட்டார்கள்.

பிறகு தான் தெரிந்துகொள்கிறார்கள் அவனுக்கு 12 வது வயதில் மரணம் சம்பவிக்கும் என்று. என்றும் சத்தியத்தையே பேசும் சப்தரிஷிகளின் வாக்கு பொய்க்குமா?

இருப்பினும் இந்தப் பிரச்னையை பிரம்மாவிடம் கொண்டு செல்கிறார்கள். அவரிடமும் விழுந்து ஆசி பெறுகிறான் மார்கண்டேயன். அவரும் அதே போல ஆசி வழங்கிவிடுகிறார்.

இப்படி பார்க்கும் பெரிவர்கள் எல்லாம் அவனுக்கு ஆசி வழங்கவே அவர்கள் ஆசி அனைத்தும் சேர்ந்து அவனது தலையெழுத்தையே மாற்றிவிடுகிறது.

பெரியவர்களின் ஆசியை நிறைவேற்றுவது பரம்பொருளின் கடமையல்லவா? ஆகவே தான் சிவபெருமான் தோன்றி மார்கண்டேயனை காத்ததோடு மட்டுமல்லாமல் அவன் என்றும் 16 அதாவது சிரஞ்சீவியாக இருப்பான் என்று வரமும் தருகிறார்.

பெரியோர்களை விழுந்து வணங்குவது என்பது நமது பாரம்பரியங்களில் ஒன்று.

பகவான் கிருஷ்ணர் தம்மினும் பெரியோர்களை கண்டால் தவறாது விழுந்து வணங்குவார்.

எனவே வயதிலும் தகுதியிலும் சிறந்து விளங்கும் பெரியோர்களை கண்டால் அவர்களை விழுந்து வணங்கி அவர்களது ஆசியை பெறவேண்டும். அது உங்களை காக்கும் அரண் மட்டுமல்ல, தலையெழுத்தையே மாற்றவல்லது.


ஆன்மிகமலர் மெயில் புக்

# சர்ப்ப தோஷம் பரிகாரங்கள்:

தோஷம் என்பது பூமியில் பிறந்த மனிதனின் செயலுக்கு கிடைக்கும் ஒருவகை தடை என்பது தான் உண்மை, இது நம் சந்ததியினர் செய்யும் பலா பலன்களுக்கும் சேர்த்தே வம்சத்திற்கு ஏற்படும்.

எந்தத் தவறும் செய்யாதவனுக்கும், அவனின் பரம்பரையில் வந்த முன்னோர் செய்த செயலுக்கு நல்லவை, தீயவற்றிற்கு ஏற்ப பலன்கள் கிடைக்கும்.

அதில் ஒரு வகையான தோஷம் நாக தோஷம். இந்த தோசத்தை போக்க ஒருசில வழிமுறைகளைப் பார்ப்போம்.

தங்கம் நிரம்பிய குடம் அல்லது தெய்வீகம் நிறைந்த பொருட்களுடன் கும்பம் வைத்து வழிபட்டால் தோஷம் நீங்கி செல்வ செழிப்பு உண்டாகும்.

❖ பட்டு சார்த்துதல், தானியம் மற்றும்திவ்ய ஆபரணங்கள்வழங்கினால் தோஷம் விலகி கல்விமற்றும் சுபிட்சவாழ்வு உண் டாகும்.

❖ உப்பு காணிக்கை செலுத்தினால் சர்ப்ப தோஷம் விலகி உடல் நலம் பெறும்.

❖ மஞ்சள் காணிக்கை செலுத்தினால் சர்ப்ப தோஷத்தின் விஷத்தன்மை நீங்கும்.

❖ நல்ல மிளகு, கடுகு,சிறுபயிறு போன்றவற்றை நைவேத்தியமாக செலுத்தினால் நாக தோஷத்திலிருந்து விடுபட்டுஆரோக்கிய வாழ்வு பெறலாம்.

❖ மஞ்சள் பொடி, பால் நைவேத்தியம் படைத்தால் தோஷத்தினால் ஏற்பட்ட குறைகள் நீங்கி குழந்தை பாக்கியம் உண்டாகும்.

❖ தோஷ பரிகாரத்திற்கு மஞ்சள் பொடி காணிக்கை, பால் பழம், பால் பாயாசம், அப்பம், இளநீர், பூக்கள், அவல் நைவேத்தியம் செய்ய வேண்டும்.

❖ கேதுவின் அருள் பெற விநாயகர், சித்ர குப்தர் ஆகிய தெய்வங்களை வழிபடலாம்.

❖ ராகுவின் அருள் பெற துர்க்கை அம்மன், கருமாரி அம்மன் ஆகிய தெய்வங்களை வழி படலாம்.

❖ காஞ்சிபுரத்தில் சித்ரகுப்தருக்கு தனி ஆலயம் உள்ளது. அங்கு கேது பரிகார பூஜை செய்யலாம்.




❖ புற்று இருக்கும் அனைத்து அம்மன், காளி கோவில்களிலும் ராகு பரிகார பூஜைகள் செய்யலாம்.

❖ நவகிரகத்தில் உள்ள ராகு கேதுவுக்கும் விளக்கேற்றலாம்.

❖ சிவன் கோவிலில் உள்ள விஷ்ணு துர்க்கையை ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் வழிபட வேண்டும். பெருமாள் கோவிலில் உள்ள விஷ்ணு துர்க்கையை புதன்கிழமை ராகு காலத்தில் வணங்குவது நல்லது.

❖ சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகருக்கு அபிஷேக, ஆராதனைகள், அர்ச்சனை செய்து வழிபடவும்.

❖ தேய்பிறை அஷ்டமியில் காலபைரவருக்கு வடை மாலை சாத்தி வழிபாடு செய்யலாம்.

❖ ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்தி வழிபடவும்.

❖ ஞாயிற்றுக் கிழமை ராகு காலத்தில் விநாயகருக்கு அருகம்புல் சாத்தி வழிபடவும்.

❖ பசுமாட்டிற்கு வாழைப் பழம் கொடுத்து வழிபடலாம்.

❖ ஆஞ்சநேயருக்கு சனிக் கிழமை காலை ஒருபொழுது மட்டும் விரதம் இருக்கலாம்.

❖ வாரந்தோறும் துர்க்கை அல்லது காளிக்கு எலுமிச்சம் பழம் மாலை சாத்தி வழிபடவும். எலுமிச்சம் பழம் மாலையில் 16 அல்லது 32 என்ற எண்ணிக்கையில் பழம் இருக்க வேண்டும்.

❖ அரசு வேம்பு மரம் உள்ள விநாயகரை சனிக்கிழமை காலை ராகு காலத்தில் சுற்றி வந்து வழிபடவும்.

# கோமுகத்தின் சிறப்புகள்

கோவில்களில் அபிஷேகம் செய்த நீர் சன்னதியிலிருந்து வெளிவரும் இடம் கோமுகம் என்று அழைக்கப்படுகிறது அந்த இடத்தில் பல தேவதைகள் வசித்து வருகிறார்கள் அந்த அபிஷேக நீர் அவர்கள் மேல் பட்டு வெளிவரும் பொழுது அவர்கள் மகிழ்கிறார்கள் அவ்வளவு புனிதமான இடத்தை நம்மால் இயன்ற பொழுது நன்றாக கழுவி சுத்தம் செய்து மஞ்சள் பூசி குங்குமம் வைத்து பூக்கள் கோவில் வணங்கினால் கடவுளின் அருளோடு அந்த தேவதைகளின் அருளும் கிடைக்கும் பழமையான கோவில்களில் முன்பு இவற்றை கடைபிடித்தார்கள் .




ஆன்மிகமலர் மெயில் புக்

# வசிய சக்திகளிடமிருந்து பெண்களை காக்கும் குங்குமம்



குங்குமம் லட்சுமி கடாட்சம் மிக்கது. பெண்கள் குங்குமம் இடுவதால் மகாலட்சுமியின் நீங்காதஅருளைப் பெறுகிறார்கள்.

குங்குமத்தை மோதிர விரலால் தான் இடவேண்டும். சிவப்பு நிற குங்குமமே புனிதமானது. பிற வண்ணங்களில் கிடைக்கும் குங்குமம் சாதாரணமானவையே.

மாங்கல்யம், நெற்றி, தலைவகிடின் ஆரம்பம் ஆகிய மூன்று இடங்களிலும் ஸ்ரீ லக்ஷ்மிதேவி வாசம் செய்கிறாள்

இந்த மூன்று இடங்களிலும் குங்குமத்தை இடுவதே சிறப்பு.

கோயிலில் குங்குமத்தைப் பெறுகையில் வலக்கையில் வாங்கி இடக்கைக்கு மாற்றக்கூடாது.

வலது உள்ளங்கையில் குங்குமத்தைப் பெற்று அந்நிலையிலேயே வலது மோதிர விரலை வளைத்து, குங்குமத்தைத் தொட்டு நெற்றிக்கு இடும் புனிதமான முறையினால் தான் குங்குமத்தின் பரிபூரண தெய்வீக சக்தியை பெற முடியும்.

இக்குங்குமத்தை மருத்துவ ரீதியாக பார்த்தால், படிகாரம், சுண்ணாம்பு தண்ணீர், மஞ்சள் ஆகிய மூன்றையும் சேர்த்துதான் குங்குமம் தயாரிக்கிறார்கள்.

இதில் சேர்க்கப்படும் மஞ்சள் நாளடைவில் இரும்புச் சத்தாக மாறிவிடும்.

படிகாரம் கிருமி நாசினி என்பதால் தோல் சம்பந்தப் பட்ட நோய்கள் வரவே வராது. தொற்றுநோய் கிருமிகளும் நெருங்காது. மூளைக்கு செல்லும் நரம்புகள் அதிகமான உஷ்ணத்தை மூளைக்கு அனுப்பாமல், அதை கட்டுப்படுத்தக்கூடிய பகுதி நெற்றி.

அந்த நெற்றியில் குங்குமம் இடுவதால் அந்த சூடு தணிகிறது.

குங்குமம் அணிவதினால் உண்டாகும் பலன்கள்:

1. சுமங்கலிப்பெண்களின் தலை வகிட்டின் நுனியை சீமந்த பிரதேசம் என்பார்கள். அம்பிகையின் வகிட்டில் உள்ள குங்குமம் பக்தர்களுக்கு சேமத்தைக் கொடுக்கும்.
2. சுமங்கலிப் பெண்களின் சீமந்த பிரதேசம் ஸ்ரீமகாலட்சுமியின் இருப்பிடம் சுமங்கலிகளின் சக்தி குங்குமத்தில் உள்ளது.
3. வீட்டிற்கு வரும் சுமங்கலிகளுக்கு குங்குமம் கொடுப்பது, தருபவர் பெறுபவர் இருவருக்கும் மாங்கல்யத்தின் பலத்தைப் பெருக்கும்.
4. குங்குமம் ஆரோக்கியமான நினைவுகளை தோற்றுவிக்கும். குங்குமம் அணிந்த எவரையும் வசியம் செய்வது கடினம்.
5. பெண்கள் குங்குமத்தை தான் இட்டுக் கொண்ட பின்பு தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.
6. அரக்கு நிற குங்குமம் சிவசக்தியை ஒரு சேரக் குறிப்பதாகும்.
7. தெய்வீகத்தன்மை, சுபதன்மை, மருத்துவத் தன்மை உள்ள குங்குமம் அணிவதால் முகம், உடல் மற்றும் மனம் ஆகியவைகளுக்கு அதிக நன்மைகள் உண்டாகும்.
8. திருமணமான பெண்கள் நெற்றி நடுவிலும் வகிட்டின் தொடக்கத்திலும் குங்குமம் அணிவது சிறப்பு.
9. ஆண்கள் இருபுருவங்களையும் இணைத் தாற் போல் குங்குமம்அணிவது தன்னம்பிக் கையைஅதிகரிக்கும்.
10. கட்டைவிரலால் குங்குமம் இட்டுக் கொள்வது மிகுந்த துணிவைக் கொடுக்கும்.
11. குருவிரலால் (ஆள்காட்டி விரல்) குங்குமம் அணிவது முன்னனித் தன்மை, நிர்வாகம், ஆளுமை போன்றவற்றை ஊக்குவிக்கும்.
12. சனிவிரல் (நடுவிரல்) குங்குமம் இட்டுக் கொள்வது தீர்காயுளைக் கொடுக்கும். குங்குமம் அணிவது தெய்வீக தன்மை, உடல் குளிர்ச்சி மற்றும் சுயக் கட்டுபாட்டிற்கு நல்லது.

மங்களம் தரும் குங்குமத்தை அணிந்து இன்னும் மங்களகரமாக இருக்க உங்கள் வீட்டு இளந்தளிர்களுக்கு இந்த நல்ல நாளில் ஆரம்பித்து படிப்படியாக

சொல்லிகொடுங்கள்.

வசியத்தில் இருந்து தப்பிக்க குங்குமம் வைங்க இந்திய கலாச்சாரத்தில் பெண்கள் குங்குமப்பொட்டு வைத்துக்கொள்வது மங்களமானதாக கருதப்படுகிறது.

அது அழகுத் தொடர்பானதும் கூட. மஞ்சளால் உருவாக்கப்பட்ட தூய்மையான குங்குமத்தை தான் வைத்துக்கொள்ள வேண்டும்.

குங்குமத்தை கழுத்தில் உள்ள கண்டம்,
புருவத்தின் இடைப்பகுதி,
நெற்றியின் உச்சி



போன்ற இடங்களில் வைத்துக் கொள்வார்கள் அப்படி பொட்டு வைப்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

வசியத்தில் இருந்து தப்பலாம்.

மெஸ்மரிசம், ஹிப்னாடிசம், போன்றவை வழக்கத்தில் உள்ளன. மற்றவர்களை வசியப்படுத்தும் போது தம் பார்வை ஆற்றலை செலுத்த கண்டம், புருவத்தின் இடைப்பகுதி, வகிட்டு நுனி, கழுத்தின் பின்பகுதி ஆகிய இடங்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

கழுத்தின் பின்பகுதி சடையால் மறைக் கப்படுகிறது. ஏனைய பகுதிகளில் பொட்டு வைத்துக்கொள்ளும் பழக்கம் உள்ளது.

இதில் புருவ இடைப்பகுதி மிக முக்கிய மாகும். இந்த இடத்தில் பொட்டு வைத்துக் கொண்டவர்களை அவர்கள் சம்மதம் இன்றி, எவராலும் ஆழ்நிலைக்குக் கொண்டு செல்ல முடியாது. வசியப்படுத்த முடியாது.

யோகசாஸ்திரம் கூறும் உண்மை

மூலாதாரம் என்று சொல்லப்படும் பகுதியில் இருந்து பிறக்கும் உள் ஒளி கண்டத்தில் தங்குகிறது. அவ்வொளி கபாலம் மூலம் புருவ மத்திக்கு வருகிறது. அகவொளி நிலைக்கும் இடங்களைப் பொட்டு வைத்து புலப்படுத்துவதாக சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன.

பெண்கள் அனைவரும் பொட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.

திருமணமானவர்கள் என்பதை வித்தியாசப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக வகிட்டில் வைத்துக்கொள்வது மரபு. ஒட்டுப் பொட்டுக்களை இட்டுக் கொள்ளுதல் சாஸ்திரத்திற்கு முரணானது ஆகும்.



# பெரியவா ஆசையால் உருவான பெசன்ட் நகர் அஷ்டலட்சுமி கோயில்

காஞ்சி சங்கரமடத்து பெரியவா சந்திரசேகர சரஸ்வதிசுவாமி அவர்களின் விருப்பப்படி, சென்னையில் பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற் கரையின் இறுதி பகுதியில் அஷ்டலட்சுமி கோயில் கட்டப்பட்டுள்ளது.

இந்த அஷ்டலட்சுமி கோயில் கட்ட 1974-ல் அடிக்கல் நடப்பட்டது. 5-4-1976ல் அஹோபில மடத்தின் நாற்பத்தி நான்காவது ஜீயர் வேதாந்ததேசிக யதீந்திர மகாதேசிகன் சுவாமி தலைமையில் அஷ்டலட்சுமி கோயில் குடமுழுக்குடன் நிறுவப்பட்டது.

அஷ்டலட்சுமிகோயில் அறுபத்து ஐந்து அடி நீளம், நாற்பத்தி ஐந்து அடி அகலம் கொண்டது. இலக்குமியின் அஷ்டலட்சுமி வடிவங்கள் கோபுரத்தின் நான்கு நிலைகளில் உள்ள ஒன்பது சன்னதிகளில் அமைத்துக் கட்டப்பட்டது.

முதல் தளத்தில் ஆதிலட்சுமி, தான்ய லட்சுமி, தைரியலட்சுமி உள்ளனர். இரண்டாம் தளத்தில் மகாலட்சுமியும் மகாவிஷ்ணுவும் உள்ளனர். கோயில் தரிசனத்தை இங்கிருந்தே துவக்குவர். சில படிகள் ஏறி மூன்றாம் தளமடைந்தால் அங்கு சந்தான லட்சுமி, விசயலட்சுமி வித்தியா லட்சுமி மற்றும் கசலட்சுமி சன்னதிகளைக் காணலாம். நான்காம் தளத்தில் தனியாக உள்ள தனலட்சுமியைக் காணலாம்.

அஷ்டலட்சுமிகளைத் தவிர இங்கு தசாவதார அவதாரங்களும் குருவாயூரப்பன், கணபதி, தன் வந்திரி மற்றும் அனுமன் சன்னதிகளும் உண்டு.



GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# அற்புத பலன்களை வைத்திருக்கும் கருப்பட்டி

இன்று உலகெங்கிலும் உள்ள மக்கள் செயற்கையான உணவுகளை விடுத்து, உடல் நலத்தை மேம்படுத்துகின்ற பாரம்பரியமான உணவுகளை நோக்கி திரும்பிக் கொண்டிருக் கின்றனர். நம் நாட்டிலும் நமது முன்னோர்கள் பயன்படுத்திய ஏராளமான உணவுப் பொருட்கள் காலமாற்றத்தில் மறைந்து போய் உள்ளன. ஆனால் தற்போது அவை ஆர்வம் உள்ள மக்களால் மீட்டெடுக்கப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட உணவுகளில் ஒன்று தான் “கருப்பட்டி” இந்த கருப்பட்டி சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்.

## கால்ஷியம் சத்து...

சுண்ணாம்பு சத்து அதிகம் கொண்டதாக இருக்கிறது. இனிப்பு உணவுகளில் நாம் பெரும்பாலும் வெள்ளை சர்க்கரையை சேர்த்து பயன்படுத்தும் இந்த வெள்ளை சர்க்கரைக்கு பதிலாக கருப்பட்டியை இனிப்பு கலந்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு கால்சியம் அதிகம் கிடைத்து நமது உடலில் பற்களும், எலும்புகளும் வலுப்பெறும்.

## கர்ப்பப்பை வலுபெறும்......

பெண்களின் வாழ்வில் ஒரு முக்கியமான பருவம் பூப்படையும் காலமாகும். இக்காலத் தில் பெண்களின் கருப்பை பலம் பெறும் வகையிலான உணவுகளை சாப்பிட வேண் டும். பருவம் அடைந்த பெண்களுக்கு கருப்பட்டியையும் உளுந்தையும் சேர்த்து, உளுந்தங்களி செய்து சாப்பிடக் கொடுத்து வருவதால் அவர்களின் கருப்பை வலுப்பெற்று ஆரோக்கியமாக இருக்கும்.

## நீரிழிவு நோய்க்கு தீர்வு...

இன்று பெரும் பாலானவர்களை பாதித்திருக்கும் ஒரு நோயாக நீரிழிவு நோய் இருக்கிறது. சர்க்கரை வியாதி எனப் படும் நீரிழிவு நோய் வந்தவர்கள் பாலிஷ் செய்யப்பட்ட அரிசி சாப் பிடுவதை தவிர்த்து, கைக்குத்தல் அரிசியுடன் கருப்பட்டி கலந்து சேர்த்து சாப்பிட்டு வந்தால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும். நீரிழிவு நோயும் கட்டுப்பட்டு,அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை ஏற் படாமல் தடுக்கும்.

## எலும்புகள் வலுவடையும்......

நமது உடலில் அடிப்படை ஆதாரமாக இருப்பது எலும்புகளாகும். வயது ஏற ஏற எலும்புகள் வலிமை குறைவதை தடுக்க முடியாது. கருப்பட்டி கால்சியம் மற்றும் தாது சத்துகள் அதிகம் கொண்டதாக இருக்கிறது. எனவே குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அடிக்கடி கருப்பட்டி சாப்பிட்டு வந்தால் மகரயாழ் உடலில் எலும்புகள் வலுப்பெற்று எலும்புகள் தேய்மானம் போன்றவை ஏற்படாமல் காக்கும்.



## பசியின்மை நீங்கும்...

ஒருவர் ஆரோக்கியமாக இருப்பதற்கு அவருக்கு நன்கு பசி எடுக்க வேண்டும். ஆனால் ஒரு சிலருக்கு உடலில் ஏற்படும் சில பிரச்சனைகளால் பசியின்மை ஏற்படுகிறது. சீரகத்தை நன்கு வறுத்து, சுக்கு கருப்பட்டியுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் பசியின்மை நீங்கி, நன்கு பசி எடுக்கும். உணவை எளிதில் செரிமானம் செய்யவும் உதவும்.

## உடலில் நச்சு தன்மை நீங்கும்...

நாம் சாப்பிடும் உணவு வகைகளிலிருந்து அருந்தும் குடிநீர் வரை அனைத்திலும் சிறிய அளவில் மாசுகள் நிறைந்திருக்கவே செய்கின்றன. இந்த மாசுகள் நமது உட லுக்கு தீங்கு விளைவிக்கிறது. சிறிதளவு கருப்பட்டியில், சிறிது சுண்ணாம்பு சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடலில் தேங்கி இருந்த நச்சுக்கள் அனைத்தும் வெளியேறி உடல் தூய்மை அடையும்.

## வாய்வு தொல்லை நீங்கும்.....

உடலில் இருக்கும் வாதம் தன்மை அதிகரிப்பதாலும், வாயுத் தன்மை அதிகமுள்ள உணவுகளை உட்கொள்வதாலும் உடலில் வாயு அதிகரித்து, தசைப்பிடிப்பு மற்றும் இன்ன பிற பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. கருப்பட்டியுடன் ஓமத்தை சேர்த்து சாப்பிட்டு வந்தால் வாயுத் தொல்லை விரைவில் நீங்கும்.

## தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும்.....

குழந்தை பெற்ற பெண்கள் குழந்தைகளுக்கு அடிக்கடி தாய்ப்பால் கொடுப்பது மிகவும் அவசிய மானதாகும். ஒரு சில புதிதாக குழந்தை பெற்ற பெண்களுக்கு தாய்ப்பால் சுரப்பது குறைகிறது. இப்படியான பெண்கள் சுக்கு, மிளகு பொடியை கருப்பட்டியுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும். இந்த கருப்பட்டியில் இருக்கும் சத்துகள் தாய்ப்பால் மூலமாக குழந்தைகளுக்கும் சென்று சேரும்.

## சளித்தொல்லை நீங்கும்.....

குளிர்காலங்களிலும், குளிர்ச்சியான உணவுகளை சாப்பிடும் போதும் ஜலதோஷம் ஏற்பட்டு மூக்கில் நீர் வடிதல் மற்றும் இருமல் போன்றவை ஏற்பட்டு, நம்மை மிகவும் அவதிக்குள்ளாக்குகிறது. குப்பைமேனிக் கீரையுடன் கருப்பட்டியைச் சேர்த்து வதக்கிச் சாப்பிட்டு வந்தால் வறட்டு இருமல் மற்றும் நெடுநாட்களாக இருக்கும் சளி தொல்லை முற்றிலும் நீங்கும்.

## தோல் பளபளப்பு மேம்படும்...

நமது உடலை போர்வை போல் மூடி இருக்கும் தோல் உடலை வெளிப்புற வெப்பம் மற்றும் குளிரிலிருந்து பாதுகாக்கும் ஒரு கவசமாக இருக்கிறது. வயதாகும்போது பெரும்பாலானோருக்கு தோலில் சுருக்கங்கள் வருவதோடு பளபளப்பும் குறைகிறது. கருப்பட்டியை அடிக்கடி சாப் பிட்டு வருபவர்களுக்கு தோலில் ஈரப்பதம் இருப்பதோடு சருமம் பளபளப்பு அதிகரித்து, தோல் சுருக்கங்கள் ஏற்படாமல் தடுக்கிறது.

# விதியை மாற்றும் தியானம்

அன்பு குருதேவர் அருளுகிறார்: “தற்போதைய தீய பழக்கங்களிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்வதற்கும், மேலும் உங்களுக்கு துன்பத்தை ஏற்படுத்திய அந்த விதியின் தீர்ப்புகளிலிருந்து தப்பிப்பதற்கும் நீங்கள் உண்மையாக விரும்பினால், தியானத்தைத் தவிர வேறு உயர்ந்த உபாயம் உங்களுக்கில்லை. நீங்கள் இறைவன்மீது ஆழ்ந்து தியானம் செய்யும் ஒவ்வொரு முறையும் அனுகூலமான மாற்றங்கள் உங்கள் மூளையின் வரிவடிவமைப்புகளில் நிகழ்கின்றன.”

“நீங்கள் நிதி சம்பந்தமான, நல்லொழுக்கம் சம்பந்தமான அல்லது ஆன்மீக ரீதியான தோல்வியாளர் என்று வைத்துக்கொள்வோம். “நானும் என் தெய்வத் தந்தையும் ஒன்றே” என்று சங்கல்பித்துக்கொண்டு புரியும் ஆழ்ந்த தியானத்தின் மூலம், நீங்கள் இறைவனின் குழந்தை என்று அறிவீர்கள். அந்த இலக்கைப் பற்றிக்கொள்ளுங்கள். ஓர் உயர்ந்த ஆனந்தத்தை நீங்கள் உணரும் வரை தியானம் செய்யுங்கள். உங்கள் இதயத்தில் ஆனந்தம் பாயும்போது, அவனுக்கான உங்கள் ஒலிபரப்பிற்கு இறைவன் மறு மொழி அளித்திருக்கிறான். அவன் உங்கள் பிரார்த்தனைகளுக்கும் ஆக்கபூர்வமான சிந்தனைக்கும் செவிசாய்த்துக் கொண்டிருக்கிறான். இது ஒரு மாறுபட்ட மற்றும் நிச்சயமான வழிமுறை:

முதலில், "நானும் என் தெய்வத் தந்தையும் ஒன்று” என்ற எண்ணத்தின் மேல் ஓர் உயர்ந்த அமைதியையும், பிறகு உங்கள் இதயத்தில் ஓர் உயர்ந்த ஆனந்தத்தையும் உணர முயற்சி செய்துகொண்டு தியானம் புரியுங்கள். அந்த ஆனந்தம் வரும்பொழுது கூறுங்கள், “தெய்வத்தந்தையே, நீ என்னுடன் இருக்கிறாய். என்னுள் உள்ள உன் பெரும் சக்தியை, தவறான பழக்கங்கள் மற்றும் கடந்த கால மனோபாவங்களின் விதைகளைக்கொண்ட என் மூளையின் உயிரணுக்களை எரிக்கும்படி கட்டளையிடுகிறேன்.” தியானத்திலுள்ள இறைவனின் சக்தி அதைச்செய்யும். உங்களை, நீங்கள் ஓர் ஆண் அல்லது பெண் என்னும் வரையறைப்படுத்தும் உங்கள் உணர்வு நிலையிலிருந்து விடுவியுங்கள்; நீங்கள்  இறைவனின் குழந்தை என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். பிறகு மனதினுள் சங்கல்பித்து இறைவனிடம் பிராத்தனை செய்யுங்கள். “என்னை ஒரு கைப்பாவையாகச் செய்திருக்கும் தீயப்பழக்கங்களின் வரிப்பள்ளங்களை அழிப்பதற்கு என் மூளையின் உயிரணுக்கள் மாறுவதற்கு நான் கட்டளையிடுகிறேன். இறைவா, உன் தெய்வீக ஒளியினால் அவற்றை எரித்துவிடு.” மேலும் யோகதா சத்சங்க தியான உத்திகளை, குறிப்பாக கிரியா யோகத்தை நீங்கள் பயிற்சி செய்யும்பொழுது இறைவனின் ஒளி உங்களைத் தூய்மைப்படுத்துவதை நீங்கள் கண்கூடாகக் காண்பீர்கள்.”

“ஆனால் நீங்கள் மன ஒருமுகப்படவேண்டும். இறைவனுடன் மிக ஆழமாக நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டும். இரவுதான் இதற்கு மிகச்சிறந்த நேரம். உங்களைச் சுற்றியுள்ள உலகம் அமைதியாக இருக்கும் அந்த நேரத்தில் இறைவனுடன் தொடர்புகொள்ள முயற்சி செய்வது எவ்வளவு அற்புதமானது. இரவில் நான் உறங்கச் செல்வதற்கு முன் என் மிக உயர்ந்த இறை அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். எனக்கு  விருப்பம் இல்லையென்றால், நான் ஒருபோதும் உறக்கத்தைப்பற்றிச் சிந்திப்பதுகூட இல்லை. இரவில் இறைவனுடன் இருக்க விரும்புகிறேன். அவன் என்னைக் கவனித்துக் கொள்கிறான்.

மாயையிலிருந்து இறைவனில் மட்டும்தான் நீங்கள் பாதுகாப்பாக உள்ளீர்கள்.

மேலும் குருதேவர் தொடர்கிறார்; “கடந்து செல்லும் வாழ்க்கைக் கனவுகளில் பற்று வைக்காதீர்கள். இறைவனுக்காக, இறைவனுக்காக மட்டுமே வாழுங்கள். இந்த உலகில் விடுதலை மற்றும் பாதுகாப்புப் பெற இது ஒன்றுதான் வழி. இறைவனுக்கு வெளியே எங்கும் பாதுகாப்பு இல்லை. நீங்கள் எங்கு சென்றாலும் சரி, மாயை உங்களைத் தாக்க முடியும். இப்பொழுதே விடுதலை பெறுங்கள். இப்பொழுதே இறைவனின் ஒரு புதல்வனாக இருங்கள். நீங்கள் அவன் குழந்தை என்பதை உணருங்கள். என்றென்றைக்குமாக இந்த மாயை கனவிலிருந்து விடுபட்டிருங்கள். ஆழ்ந்தும், விசுவாசமாகவும் தியானம் செய்யுங்கள். ஒரு நாள் இறைவனுடன் பரவசத்தில் விழிப்புற்று மக்கள் தாங்கள் துன்புறுகிறோம் என்று நினைப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பதைக் காண்பீர்கள். நீங்கள், நான் மற்றும் அவர்கள் அனைவரும்

78
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக




ஆன்மிகமலர் மெயில் புக்
16-31 மார்ச் 2020 23
www.aanmeegamalar.com

தூய மெய்பொருள். பகவான் கிருஷ்ணன் கூறினார்; " இல்லாததற்கு இருப்பு இல்லை. இருப்பது இல்லாமல் போவதில்லை. (பகவத் கீதை அத்.2 ஸ்லோகம் 16) இவ்விரண்டினுடைய உண்மையும் ஞானிகளுக்கு விளங்கும்."

குருதேவர் கூறுவது மிகச் சரியாக உள்ளது. உதாரணமாக ஒரு கருத்தைக்கூற விரும்புகிறேன். யார் யார் இறைவனை அடைய வேண்டும் என்று முடிவு செய்து அவனிடத்தில் சரணடைகிறார்களோ, அவர்கள் அதற்கான வழியை வகுக்கிறார்கள். அந்த வழிதான் தியானம். தியானத்தைவிட மிக உயர்ந்த வழி வேறெதுவும் இல்லை. இந்த வழி இறைவனை அடைவதற்கு மட்டுமல்லாமல், நம் சம்சார வாழ்க்கையை செம்மையான முறையில் நடத்துவதற்கும் மிகவும் பயன்படுகிறது. சம்சார வாழ்க்கையுடன் தியானத்தை இணைக்கும்பொழுது சமநிலை கிடைக்கப்பெறுகிறது; அத்துடன் வாழ்க்கையும் ஒழுங்குபடும். தூய்மையான ஆத்மாவிற்கு, இறைவழிமுறைகளைக் கடைபிடித்து வாழ்க்கை நடத்த இயலும்.

அடுத்து, நம் குறிகோளுக்கு (இறைவனை அடைவதற்கு) எற்றவாறு சிறிது சிறிதாக நம் வாழ்க்கை மாறுவதை நாம் காணமுடியும். ஆரம்பத்தில், குடும்பமாக இருப்பவர்கள் குடும்பத்திலுள்ளவர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் பற்று, பாசத்துடன் இருப்பார்கள். ஆனால் போகப் போக பற்றும் பாசமும் எல்லாம் காணாமற்போய்விடும். ஆனால் அவற்றை தியானம், மற்றும் கிரியா என்ற விசேஷமான செயல் இறைவன்மீது திருப்பிவிட்டுவிடும். அதன் பிறகு மனமும் சிறிது சிறிதாக மாறத்தொடங்கும். நாம் பிறக்கும்போதே மாயையும் நம்முடன் பிறக்கிறது அல்லவா! அந்த மாயை, நம் மனம் எவ்வளவு தூய்மையடைந்தாலும் அவ்வப்போது நமக்குள் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. குழப்பம் என்றால், தீய வழியைக்காட்டுவதுதான். ஆனால் நாம் இடைவிடாமல் தியானம் செய்து, இறைத் தொடர்பை ஏற்படுத்துவதனால் தியானமாகின்ற செயல் இறைவனை நம் பக்கம் இழுக்கச் செய்கிறது. அப்பொழுது தீமையின் பக்கம் திரும்பாமல் இறைவன் காட்டும் நல்லவழியை பின்பற்றத் தொடங்குவோம். எவ்வளவு ஆழ்ந்து தியானத்தில் ஈடுபடுகிறோமோ அவ்வளவு நம்முடன் இறைவன் இருந்து நம்மை மாயையிலிருந்து பாதுகாக்கிறான். அந்த மனம் தான் மாயை.

மற்றொரு விஷயம் என்னவென்றால், இறைவனிடத்தில் சரணடைந்த ஓர் ஆத்மா, அவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன் அவனை அடைந்து தான் ஆகவேண்டும் என்ற மிகுந்த வைராக்கியத் துடன் இருக்கும், அந்த வைராக்கியம் என்ற பெரிய உளியானது என்ன செய்யுமென்றால், நம் மனதை கொஞ்சம் கொஞ்சமாகச் செதுக்க ஆரம்பிக்கும். ஆரம்பத்தில் இந்த உலகத்தையும் உலகப் பொருட்களையும் விரும்பியிருக்கலாம். ஏனெனில் அவை வாழ்க்கைக்குத் தேவைப்படும் என்று தவறாக எண்ணியதின் மூலம் அவ்வாறான விருப்பம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அந்த எண்ணங்களுக்கு மாற்றம் ஏற்படும். ஏனென்றால் மேலே கூறப்பட்டுள்ள வைராக்கியமான ஆத்மாவுக்கு அவ்வாறான எண்ணங்கள் தவறு என்று புரியவரும். உலகம், உலகப் பொருட்கள், குடும்பம், உறவினர்கள், எல்லாம் இறைவனை அடைவதற்குத் தடை செய்யக்கூடியது என்பது புரியவரும். எல்லாமே நமக்கு சவுக்கடி தரக்கூடியவையாகும். அவையெல்லாம் அப்படிப்பட்டவை என்பதை இறைவன் உணர்த்துவான். யாரை அல்லது எந்தப் பொருளை நாம் அதிகமாக விரும்புகிறோமோ அவர்களால், அல்லது அந்தப் பொருளால் நல்லதொரு பாடத்தைக் கற்றுத்தரவைப்பான் இறைவன். அதன் பின்னர் அவற்றைக் கைவிடும்படி மனதை மாற்றுவான்.

அதன் பின்னர், வைராக்கியம் என்ற சிற்பி இறைனைத் தவிர இவ்வுலகில் நமக்கு வேறுயாரும் இல்லை, மற்றும் ஒரு சரியான பாடத்தைக் கற்றுத்தருகிறது. இந்த வைராக்கியமென்பதும் சிற்பி என்பதும் குறிக்கோள் என்பதும் எல்லாம் அந்த பெருமைக்குரிய, மகத்தான நம் தந்தை இறைவனேயாவான். அவன் என்ன செய்வான் என்றால் "அவன் ஒரு பொறாமைக்காரன் என்று நம் அன்பிற்குரிய குருதேவர் பலமுறை கூறியுள்ளார்அந்தப் பொறாமைக்காரன், அவன் தன் குழந்தைகள் தன்னை மட்டும்தான் நினைக்க வேண்டும், தன்னை மட்டும்தான் ஆசைப்படவேண்டும், தன்னிடம் மட்டும்தான் பற்றுவைக்கவேண்டும், வேறு எந்தப்பொருள்மேலும் ஆசையோ பற்றோ வைக்கக்கூடாது என்று எண்ணுகிறான். அதற்கேற்ப நாம் ஒவ்வொருவரும் அவன் சித்தத்துடன் இணைந்திருந்தால், நம் மனதையும் சூழ்நிலைகளையும் எதிர்பாராத விதமாக மாற்றிவிடுவான், எவவாறெனில் நம்மை வெறுத்தவர்களை நாம் அன்பு பாராட்டத் தொடங்குவோம். இவ்வாறு அந்த நட்பு சிறிது சிறிதாக விரிவடையத் தொடங்குகிறது. அப்பொழுது நம் உறவினர்கள், சுற்றத்தார் மற்றும் அனைவரையும் நம் அன்பிற்குரியவர்களாக எண்ணத் தொடங்குவோம். பதிலுக்கு அவர்களும் நம்மை நேசிக்கத்தொடங்குவர். இதெல்லாம் யார் செய்வது என்றால், இறைவன்தான் செய்கிறான்; செய்யவைக்கிறான்.

அடுத்தகட்டம் என்னவென்றால், இந்த உலகத்துடனும் உறவுகளுடனும் சிறிதளவு இருந்த பற்று குறைந்து அது நாளடைவில் இல்லாமல் போய்விடுகிறது. அப்பொழுது அனைத்தும் இறைவன்; அனைவருள்ளும் இறைவன் என்ற எண்ணம் ஏற்படுகிறது. பின்னர் இந்த உலகத்தில் வாழுவது என்பது விரும்பாத ஒன்றாகிவிடும். ஆனால் நம்முடன் இறைவன் இருப்பான்; அவன் மட்டும் இருப்பான். அதனால் அவனையே மனமானது " இறைவா ! இறைவா!. உன்னுடன்தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உனக்காகத்தான், உனக்காக மட்டும்தான் வாழுகிறேன். அது உனக்கே தெரியும். நான் எதற்காக வாழுகிறேன் என்றால், உன்னைப் பார்க்கவேண்டும்; உன்னுடன் பேச வேண்டும்; உன்னுடன் இணைய வேண்டும். என் வாழ்க்கையை உன்னோடு நிறைவு பெற வேண்டும். அதற்காக மட்டும்தான் வாழுகிறேன். இறைவா! நீ என் நாட்களை விரைவில் கடத்திவிடுவாய்.; நான் உனக்காகக் காத்திருக்கிறேன்" என்று அந்த ஆத்மா கூறிக்கொண்டிருக்கும். இவ்வாறு இறைவனிடத்தில் சரணடைந்து, அவனை நேசிக்கின்ற ஆத்மாக்களுக்கு இறைவன் படிப்படியாக மாறுதல்களை அருள்வான். அது போன்று இந்த உலகத்திலுள்ள அனைவரும் இறைவனை நேசித்து அவனை நினைத்து தியானம் செய்து பின் தன் கடமைகளைச் செய்தால் அந்த ஆத்மாவினுடைய வாழ்வு இறைவனுடன் இணைந்து நிறைவு பெறும். அவ்வாறானால் சண்டையேது? விரோதம் ஏது? போர் ஏது? பகையேது? அனைவரும் பரஸ்பரம் உதவியாக இருந்து அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் வாழலாம்.

எனவே தியானம் மட்டும்தான் உலகத்தில் மிகவும் மேன்மையுடையது என்பது நன்கு புலப்படுகிறது. தியானத்தை விடுத்து, இறைவனை மறந்துள்ள வாழ்க்கை சண்டை, விரோதம், பகைமை, பொறாமை, சுயநலம், தீராத நோய் போன்ற பிணிகளைக்கொண்டதாக அமையும். எனவே அனைவரும் இறைவனுக்கு முன்னுரிமை தந்து அவனை நேசித்தவண்ணம் வாழ்ந்தால் பேரானந்தம் நம்மை எப்பொழுதும் தழுவிக்கொண்டேயிருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. இவ்வாறு மாயையை நாம் வெல்லலாம்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"

aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

# உடம்பில் உள்ள ஆயிரக்கணக்கான நாடிகளையும் குண்டலினி சக்தியே பாதுகாக்கிறது

அழுகுணி சித்தர் என்று ஒருவர் இருக்கிறார். இவர் எல்லா சித்தர்கள் போலவே யோக கலையிலும், மருத்துவத்திலும் மஹா நிபுணர். ஆனால், தான் கூறுகின்ற எல்லா விஷயத்தையும் ஒப்பாரி வைத்து அழுவது போன்ற எழுத்து நடையில் பாடுவார்.

அதனால், தான் அவருக்கு அழுகுணி சித்தர் என்ற பெயர் வந்தது. மற்றபடி அவருடைய நிஜப் பெயர் யாருக்கும் தெரியாது. அவர் ஒரு அருமையான விஷயத்தை கூறுகிறார். மூல நெருப்பு என்ற ராஜகுமாரன், நாடிகள் என்ற ராஜ பாட்டையில் பயணம் செய்கிறான் என்று. இதை பார்க்கும் போது ஓரளவு சித்த வைத்தியம் தெரிந்தவர்களுக்கே மலைப்பு வரும். மலைப்பதற்கான காரணங்கள் இல்லாமல் இல்லை. நமது உடம்பின் உள்ளே எலும்புகள் இருக்கிறது. இரத்த ஓட்டத்தையும், பிராண வாயுவையும் கொண்டு செல்லும் நுண்ணிய நாளங்கள் இருக்கின்றது. கண்களுக்கே தெரியாத துடிப்பு என்ற எழுபத்திரண்டாயிரம் வகை நாடிகள் இருக்கிறது. இந்த நாடிகள் எவற்றிற்கும் இது தான், இப்படித் தான் என்று அடையாளப் படுத்திக் காட்டும் உருவங்கள் கிடையாது.



அப்படி இருக்க, மூல நெருப்பு என்ற குண்டலினி சக்தி எப்படி நாடிகள் வழியாக பயணப் படுமென்று சந்தேகம் தோன்றும்.

குண்டலினி சக்தி என்பதும், உருவமே இல் லாத மின்சாரத்தை போன்ற ஒருவித அதிர்வு தான். இந்த அதிர்வு, தான் தோன்றிய இடத்திலிருந்து செல்ல வேண்டிய இடத்திற்கு அதாவது பிரம்மா கபாலத்திற்கு செல்லும் வழியில் ஏற்பட்டிருக்கும் இடைஞ்சல்களை நீக்கி வழியை சுத்தப்படுத்துவது மட்டும் தான் நாடிகளின் முக்கிய பணியாகும்.

காரணம் குண்டலினி சக்தி எழுந்து மேலே வருவதற்கு மிக அதிகமான பிராண சக்தி தேவை. அந்த பிராண சக்தியை மூச்சு பயிற்சி வழியாக நாடிகள் பெற்று, உடம்பில் தக்க வைக்கிறது. இதனால் தான் பிராணயாமம் என்ற மூச்சுப் பயிற்சிக்கு நாடி சுத்தி என்ற பெயர் வைக்கப்படுகிறது. இந்த நாடிகள் பிற சக்தியாலும், அன்பு, பண்பு, தியானம் மற் றும் தவம் என்ற காரண சுத்திகளாலும், பரிபாலனம் செய்யப்படுகிறது.

இடைகலை நாடி, சந்திரனின் தன்மை கொண்ட குளிர்ச்சியையும், பிங்கலை சூரிய தன்மை கொண்ட வெப்பத்தையும் உடம்பில் உருவாக்கு கிறது. சுழுமுனை நாடி, அக்னி வடிவமாக இருப்பதனால், சூரிய சந்திர கலைகளை தேவைக்கு ஏற்றவாறு உடம்பிற்கு தருகிறது. இதனால் தான், கைதேர்ந்த வைத்தியர்கள் நாடிகளை பார்த்தே நோய்களை கண்டறிந்து விடுகிறார்கள்.




“திங்கள் மற்றும் புதன் கிழமையில் மனித உடம்பில் வாதத்தின் தன்மை அதாவது வாய்வு தன்மை அதிகமாக இருக்கும். செவ்வாய் கிழமை பித்தத்தின் தன்மை அதாவது அக்னியின் தன்மை அதிகமாக இருக்கும். வியாழன் கிழமை கபத்தின் தன்மை அதிகமாக இருக்கும்.”

ஒருவர் உடம்பில் இடகலை நாடி அன்னம் போன்றும், கோழி போன் றும் நடைபோடுமாம். பிங்கலை நாடி ஆமை மற்றும் அட்டைப் பூச்சி போல நடக் கும். சுழுமுனை நாடி சமயத்திற்கு ஏற்ற வாறு தவளையாகவும் பாம்பாகவும் உடம்பிற்குள் இயங்கும்.

இந்த நாடிகளின் இயக்கத்தை மையமாகக் கொண்டு மனித உடம்பில் வாதம், பித்தம் சிலேத்துமம் போன்ற தத்துவங்கள் செயல்புரிவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. திங்கள் மற்றும் புதன் கிழமையில் மனித உடம்பில் வாதத்தின் தன்மை அதாவது வாய்வு தன்மை அதிகமாக இருக்கும். செவ்வாய் கிழமை பித்தத்தின் தன்மை அதாவது அக்னியின் தன்மை அதிகமாக இருக்கும். வியாழன் கிழமை கபத்தின் தன்மை அதிகமாக இருக்கும்.

பொதுவாக தினசரி காலையில் வாதமும், நடுப் பகலில் பித்தமும், மாலையில் கபமும் உடம்பில் அதிகரிக்கும். அதே போல சித்திரை, வைகாசி மாதங்களில் வாத நாடி அதிகமாக அடிக்கும். ஆணி, ஆடி, ஐப்பசி மற்றும் கார்த்திகை ஆகிய மாதங்களில் பித்த நாடியும், மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் கப நாடியும் அதிகமாக வேலை செய்யும். வாத நாடி துடிக்கும் நேரம் ஒரு மாத்திரை பித்த நாடி துடிக்கும் நேரம் அரை மாத்திரை கபநாடி கால்மாத்திரை என்ற கால அளவில் நாடிகள் இயங்குகிறது. வாதநாடி நிமிடத்திற்கு பதினாறு என்ற முறையில் ஓடினால், மனிதனுக்கு நூற்றி இருபது வயதும், பித்த நாடி பனிரெண்டு என்ற கணக்கில் ஓடினால் நூறு வயது என்றும், கபநாடி இரண்டு என்று ஓடினால் என்பது வயதும் கணக்கு போடுகிறார்கள்.

வாதநாடி அபான வாயுடனும், பித்தநாடி பிராண வாயுவுடனும், கபநாடி சமானன் என்ற வாயுடனும் இயங்கி நிற்கும். அப்படி இயங்கினால் முப்பத்தொன்பது வயது வரை வாத நாடியும், அதன் பிறகும் அறுபத்தி மூன்று வயது வரை பித்த நாடியும் கடைசி கட்டத்தில் வாத நாடியும் வேலை செய்யும் என்கிறார்கள். இவைகளை எல்லாம் வைத்து கணக்கு போட்டு தான், மனிதனுடைய உடல் நலத்திற்கும், மன நலத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது எனவே நாடிகளின் இயக்கத்தை அலட்சிய படுத்தாமல் பராமரிக்க வேண்டுமென்று சித்தர்கள் சொல்கிறார்கள்.

குண்டலினிசக்தி இப் படி உடம்பின் அனைத்து பாகங்களுக்கும் தனது சக்திகளை கொடுத்து உடம் பில் உள்ள எல்லா



www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

இயக்கங்களையும், உணர்வுகளையும் இன்ப, துன்பங்களையும் கோப, தாபங்களையும் நிர்வாகம் செய்து உடம்பில் உஷ்ணம், குளிர்ச்சி ஆகியவற்றையும் சீராக பாதுகாத்து வருகிறது.

இதுமட்டுமல்ல, உடம்பில் உள்ள ஆயிரக்கணக் கான நாடிகளையும், குண்டலினி சக்தியே பாதுகாக்கிறது. நாடி சுத்தியின் மூலம் மேல் துருவ எழுச்சியை மேற்கொள்ளும் குண்டலினி சக்தி பேரின்ப நிலைக்கு இட்டுச் செல்கிறது.

தனித்தனியாக பகுதி பகுதியாக, நமது உடம்பிற்குள் ஆயிரம் உறுப்புகள் இருந்தாலும், அவைகள் அனைத்திற்கும் மூல கருவாக இருப்பது குண்டலினி சக்தியே ஆகும். இந்த பேரின்ப சக்தி, எழுச்சியை அடையாமல் இருக்கும் நேரம் மூலாதாரத்தில் உறங்குவது போல் படுத்துக்கிடக்கிறது. அதனால், மூலாதாரத்தை குண்டலினி சக்தியின் கருவறை எனலாம். இதே குண்டலினி ஆதிசேஷன் போல் வீறு கொண்டு எழுந்தால், சகஸ்ரத்தில் படமெடுத்து ஆடுகிறது. அதனால் குண்டலினியின் ராஜகோபுரம் சகஸ்ரம் எனலாம்.

ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், தீயிலிருந்து நீரும், தண்ணீரிலிருந்து நிலமும் உண்டானதாக உலக உற்பத்தி பற்றி இந்திய வேதங்களும், உபநிஷதங்களும், ஞான நூல்களும் கூறுகின்றன. இந்த பூதங்கள், பிரளய காலம் என்ற அழிவு நேரத்தில் நிலம், நீரிலும் நீர் நெருப்பிலும், நெருப்பு காற்றிலும், காற்று ஆகாயத்திலும், ஆகாயம் பரவெளியான பிரபஞ் சத்திலும் கலக்கிறது. இந்த இயற்கை நிகழ்வை குண்டலினி அப்படியே தனது செயல்பாடாகவும் கொண்டிருக்கிறது. அதனால், தான் சித்தர்கள் அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு பிண்டத்தில் உள்ளது அண்டத்தில் உண்டு என்கிறார்கள்.

குண்டலினி சக்தி மூலாதாரத்திலிருந்து கிளம்பி, சகஸ்ரத்தை சுழுமுனை நாடி வழியாக சென்று அடையும் போது, ஆறு ஆதாரங்களை கடந்து செல்வதாக சொன்னேன். மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்ஞா ஆகிய ஆறு ஆதாரங்களை முறையே நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் மனம் என்று யோக சாஸ்திரம் உருவாக பெயரிட்டு அழைக்கிறது. இந்த ஒவ்வொரு ஆதாரங்களிலும் குண்டலினி சக்தி நிலைபெற்று நிற்கும் போதும், பயணப்படும் போதும் என்ன மாதிரியான விளைவுகளை மனிதர்களுக்கு கொடுக்கிறது என்ற விவரங்களை அடுத்து வரும் பதிவுகளில் பார்ப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

# அர்த்தநாரீஸ்வரர் நவபாஷாண சிலை

பழநி முருகன் சிலை நவபாஷானசிலை என்பதை அனைவரும் அறிந்தது, இந்த சிலையின் மருத்துவ குணத்தை அறிந்து அந்த சிலையை சேதப்படுத்தினர். இதைப்போன்றே, திருச்செங்கோட்டில் இருக்கும் அர்த்தநாரீஸ்வரர் மூலவர் சிலைகூட நவபாஷாண விக்கிரகம்தான்.

இந்த சிலைக்கு நடைபெறும் அபிஷேக தீர்த்தம், பல்வேறு வியாதிகளைத் தீர்க்கும் சக்தி இருப்பதை அறிந்த சிலர் பல ஆண்டுகளுக்குமுன் சுவாமி விக்கிரகத்தைச் சுரண்டி எடுத்துவிட்டதால் தற்போது சுவாமியின் முக அமைப்பு மட்டும் சரியாக இருக்காது. இப்போதும் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்யும் பாலை அருந்தினால் நல்ல பலன் கிடைப்பதாக கூறப்படுகிறது.









# திருவாதிரை நட்சத்திரத்தின் சிறப்புகள்

தமிழ் மொழியில் திருவாதிரை என்று கூறப்படும் நட்சத்திரத்திற்கு வடமொழியில் ஆர்த்ரா என்று பெயர். இதுவே ஆருத்ரா எனப் படுகிறது.

மார்கழி மாத திருவாதிரை நட்சத்திர நாளில், எல்லா சிவாலயங்களில் ஆருத்ரா தரிசனம் சிறப்பாக நடைபெறும்.

ராமனுக்கு ஜென்ம நட்சத்திரம் புனர்பூசம்;

கிருஷ்ணனுக்கு ரோகிணி;

முருகனுக்கு விசாகம்.

இவையாவும் இவர்கள் பிறந்த நட்சத்திரங்கள். ஆனால் பிறப்பே எடுக்காத சிவபெருமானுக்கு பிறந்த நட்சத்திரம் திருவாதிரை என்கிறார்களே?

பிறவா யாக்கைப் பெற்றோன் பெரியோன் என்று சங்க இலக்கியமான சிலப்பதிகாரம் சிவபெருமானைக் குறிக்கிறது.

சிவபெருமானின் நட்சத்திரம் திருவாதிரை ஆனதுபற்றி புராணச் செய்திகள் உள்ளன.

சேந்தனார் ஓர் விறகுவெட்டி. அவர் சிதம்பரம் அருகேயுள்ள ஓர் ஊரில் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த சிவபக்தர். தினமும் ஒரு சிவனடியாருக்கு உணவளித்துப் பின் தான் உண்டு உணவருந்துவார்.

ஒரு நாள் அதிகமாக மழைபெய்து விறகுகள் ஈரமாயின அதனால் அன்று அவரால் விறகு விற்க முடியவில்லை. அதனால் அரிசி வாங்க காசு அவரிடம் இல்லை.

எனவே அன்று கேழ்வரகில் களி செய்து சிவனடியாரை எதிர்பார்த்திருந்தார். ஆனால் யாரும் தென்படவில்லை. மனம் நொந்த சேந்தனாரின் பக்தியை உலகிற்கு உணர்த்த விரும்பி நடராஜப் பெருமான் ஓர் சிவனடியார் வேடத்தில் சேந்தனார் இல்லம் வந்தார்.

சேந்தனார் அகமகிழ்ந்து களியை சிவனடியாருக்குப் படைத்தார். சிவனடியார் களியை



மிக விருப்பமுடன் உண்டதுமல்லாமல் எஞ்சியிருந்த களியையும் தனது அடுத்த வேளை உணவிற்குத் தருமாறு வாங்கிச் சென்றார்.

சேந்தனார் வீட்டுக்கு களி உண்ண நடராஜப் பெருமான் வந்த அந்த தினம், ஒரு மார்கழி மாத திருவாதிரை நாள் இதை உணர்த்தும் வகையில், இன்றும் ஆதிரை நாளில் தில்லை நடராஜப் பெருமானுக்கு களி படைக்கப் படுகிறது. இதனால் சிவ பெருமானின் நட்சத்திரம் திருவாதிரை ஆனது.

ஒரு காலத்தில், திரேதாயுகா என்ற பெண் பார்வதி தேவியின் தீவிர பக்தையாக இருந்தாள். திரேதாயுகா வுக்குத் திருமணம் நடந்தது. அக்காலத்தில் திருமணமான நான்காவது நாளில்தான் சாந்தி முகூர்த்தம் நடக்கும் ஆனால் திருமணமான மூன்றாவது நாளிலேயே திரேதாயுகாவின் கணவன் இறந்து விட்டான்.

திரேதாயுகா அலறித் துடித்து பார்வதி தேவியே உன் பக்தையான என்னை இப்படி சோதிக்கலாமா, உன்னை இவ்வளவு காலம் வணங்கி என்ன பயன் என்று கூறிக் கதறி அழுதாள்.

அப்போது கயிலாயத்தில் சிவன் அருகில் அமர்ந்திருந்த பார்வதி ,திரேதாயுகாவின் அலறலைக் கேட்டு அவள் கணவனுக்கு உயிர்ப் பிச்சையளிக்க சபதம் செய்தாள். அவளது சபதத்தைக் கேட்டு அதிர்ந்துபோன சிவன் உடனே எமலோகத்தை ஒரு பார்வை பார்த்தார். இதைக் கண்டு பதறிப்போன எமன் திரேதாயுகாவின் கணவனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார்.

அதன்பின் பார்வதியும் பரமசிவனும் திரேதாயுகா வுக்கும் அவள் கணவனுக்கும் தரிசனகாட்சி கொடுத்து ஆசீர்வதித்தார்கள்

இந்த நிகழ்ச்சி ஒரு மார்கழி மாத திருவாதிரை நட்சத்திர நாளில் நடந்தது.

சேந்தனாருக்கும், திரேதாயுகாவுக்கும் நேரில் தோன்றி தரிசனம் தந்த அந்த திருவாதிரை நட்சத்திர நாளையே சிவபெருமானாரின் நட்சத்திரமாக அதாவது ஆருத்ரா தரிசனமாக கொண்டாடப்படுகிறது.

சிவபெருமான் நெருப்பு உருவமாக தன்னை வெளிப்படுத்திக் காட்டியது சிவராத்திரி நன்னாள்.

சுவாமி தான் இப்பூமியில் ஆவிர்பரித்து நின்ற (தோற்றுவித்த) நாள் ஆருத்ரா நன்னாள்.

சிவராத்திரியன்று அவரை வழிபட்டால் பலன்.
ஆருத்ராவன்று தரிசித்தாலே பலன்.

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

# புடவையின் முக்கியத்துவமும் அதன் பயன்களும்

புடவை நம் கலாச்சாரத்தின் பரிசு

நம் ஹிந்து கலாச்சாரத்தில், புடவையின் முந்தானையை தலையை சுற்றியோ அல்லது தோளை சுற்றியோ அணிவது வழக்கம். அதேபோல், பெண்கள் சேலையின் தலைப்பை இடுப்பில் செருகிக்கொண்டு வேலையில் ஈடுபடுவதையும் நாம் காண்கிறோம்.



தொட்டிலில் இருக்கும் குழந்தை, அன்னை, தன்னை முந்தானையில் ஏந்தி கொள்ள வேண்டும் என்று ஏங்கும். அக்குழந்தைக்கு அன்னையின் புடவை தலைப்பே பரமேஸ்வரனாகும். குழந்தை வளரும் போதும் அன்னையின் புடவை முந்தானை யை பற்றி கொண்டு நடை பழகும். தனது குழந்தைக்கு உணவு ஊட்டியபின் அதன் வாயை துடைத்து விடவும் அன்னையின் முந்தானை உதவுகிறது.

தந்தை மணமகனின் பெற்றோரிடம் தன் பெண்ணை அவர்களின் முந்தானையில் ஏற்றுகொள்ள சொல்லும் வழக்கமும் உண்டு.

இத்தகைய புடவையையும் அதனை பற்றிய பெருமையும் விளங்கிக்கொண்டு அதை உடுத்துவதென்பது மிகவும் சிறப்பானதாகும்.

## ஹிந்துக்களின் கலாச்சாரத்தை பாதுகாக்க எப்போதும் புடவை அணிவதன் அவசியம்

மேற்கத்திய உடைகள் ஜீன்ஸ், டி ஷர்ட் மற்றும் சல்வார் குர்தா, சுடிதார் இன்றைய வாழ்க்கை முறையில் பிரிக்க முடியாத ஒன்றாகிவிட்டது. மாறாக இந்திய கலாச்சாரத்தின் அடையாளமும், பாரதீய உடையுமான ஒன்பது கஜ புடவை கிராமபுரங்களில் உள்ள பெண்மணிகளுக்கு மட்டுமே என்றாகிவிட்டது.

எந்த உடைகளுமே அதை உடுத்துபவர்களின் மீது அதன் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதிகமான ராஜஸீக தாமஸீக உடைகளான ஜீன்ஸ், டி ஷர்ட், சல்வார் குர்தா போன்ற உடைகள் பெண்களை மனகிளர்ச்சி மற்றும் உலகியல் சந்தோஷங்களின் பக்கம் ஈர்க்கின்றது. மாறாக ஸாத்வீகமான உடையான புடவைகள், பெண்களை ஒழுக்கம் மற்றும் தர்மத்தை மதிக்கும்படி செய்கிறது. தர்மத்தை மதித்து, அதன்படி நடப்பது ஆன்மீக உணர்வு மற்றும் இறை பக்தியை அதிகரித்து அந்நபரை 'கடவுளை உணர்தல்' எனும் பாதையில் முன்னேறிச் செல்ல வழிவகுக்கின்றது.

மேற்கத்திய ராஜஸீக தாமஸீக உடைகளால், தீய சக்திகளின் எதிர்மறை ஆற்றல், அதை அணிபவர் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உண்டாகிறது. இதற்கு நேர்மாறாக, ஸாத்விக உடைகள், அதை அணிபவர்களுக்கு, அத்தகைய எதிர்மறை ஆற்றலை தடுக்கும் பாதுகாப்பு கவசமாக செயல்படுகிறது.

## புடவை உடுத்துதல் அளிக்கும் நல்லொழுக்கமும் பயன்களும்

❖ பணிவு, அடக்கம் முதலிய நற்பண்புகளை நல்குதல்.

❖ மனதின் ஸ்திர தன்மை அதிகரிக்கிறது. அதன் மூலம், சித்தம் உள்முகப்படுகிறது.

❖ தாய்மையுணர்வின் எழுச்சி.

❖ புடவை, தெய்வங்களின் ஓர் அடையாளம் என்னும் உணர்வு ஏற்படுதல்.

❖ பக்திபாவம் அதிகரித்தல்.

❖ தன்னம்பிக்கை அதிகரித்தல்.

❖ க்ஷாத்ரவிருத்தி (போர் வீரனின் வீரம்மிக்க மனோபாவம்) அதிகரிக்கிறது.

❖ தனது நிஜ தன்மை விழிப்படைவதால், மனம் உள்முகப்படுவது அதிகரித்து வெளிமுகப்படுவது குறைகிறது.

புடவை கட்டுவதால் அந்நபருக்கு, தன்னை சுற்றியிருக்கும் சுற்றுப்புறசூழலில் உள்ள ஸாத்வீகத்தையும் சைதன்யத்தையும் உள்ளீர்த்து கொள்ளும் தன்மை ஏற்படும்.

புடவை கட்டுவது என்பது அந்நபரை சுற்றி கட்டப்படும் ஓர் ஆடை. ஆன்மீக விஞ்ஞானத்தின்படி, புடவை கட்டுபவர் தன்னை சுற்றியிருக்கும் சுற்றுப்புறசூழலின் ஸாத்வீகத்தையும் சைதன்யத்தையும் உள்ளீர்த்து, அதை வட்ட வடிவத்தில் தக்க வைத்து கொண்டு அதன் மூலம் நீண்ட நேரத்திற்கு நன்மை அடைகிறார்.

செயற்கை இழைகளாலான புடவைகள் கட்டுவதற்கு வசதியாக இருகின்றது என்றாலும், அவை குறைந்த அளவே சுற்றுப்புறசூழலில் உள்ள ஸாத்வீகத்தையும் சைதன்யத்தையும் உள்ளீர்க்க முடியும். மாறாக, பட்டு, பருத்தி போன்ற இயற்கை இழைகளாலான புடவைகள் ஸாத்வீகத்தையும் சைதன்யத்தையும் அதிகமாக உள்ளீர்த்து கொள்ளும் ஆற்றலுடையது. ஆகவே, இத்தகைய புடவைகளை கட்டுவதன் மூலம் அதிகளவு ஆன்மீக நன்மையடைய முடிகிறது.

ஸாத்வீகமான காட்சியை காண்பது ஆன்மீக ரீதியில் நம் மனம் மற்றும் புத்தியின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

புடவை மற்றும் வேஷ்டி முதலான ஸாத்வீகமான உடைகள் அணிந்துள்ள நபரை நாம் பார்க்கும்போது சக்தி, ஆனந்தம் மற்றும் சாந்தத்தின் அதிர்வலைகள் வெளிப்பட்டு நம் மனதில் பதிவாகி, நேர்மறை எண்ணத்தை தோற்றுவிக்கிறது.

ஸாத்வீகமான உடையணிந்த நபரை காணும் போது, நம் சூட்சும உடலில் உள்ள சக்தி நிலைகளான சக்கரங்களில், நேர்மறை தாக்கம் ஏற்படுகின்றது. அதனால் ஆன்மீக நிவாரணம் ஏற்பட்டு மாந்த்ரீகத்தின் தாக்கம் குறைகிறது.

புடவை கட்டுவதற்கு நீண்ட நேரமானாலும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை கட்ட ஆரம்பித்தல்.

துவக்கத்தில் புடவை கட்டுவதில் பயிற்சியின்மை காரணமாக சிரமம் ஏற்படினும், பழக பழக ஒரு சில தினங்களுக்குள் அது எளியதாகிவிடும். அவ்வாறு இல்லையெனில் பெண்கள் எவரும் அதை உடுத்தியிருக்க மாட்டார்கள். முற்காலத்தில் பெண்கள் ஒன்பது கஜ நீளமான புடவையை அணிந்து கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ஆரம்பத்தில் புடவை கட்டுவதற்கு நீண்ட நேரம் ஆகும் என்பது குறித்த இடையூறு தொடர்ந்து கட்டும் பழக்கத்தில் எளிதாகிவிடும் எனும்போது அதை பற்றிய கவலை எதற்கு?

மேற்கூறிய தகவல்கள் மூலம் புடவை ஆன்மீக ரீதியில் அளவில்லாத நன்மையை வழங்குகிறது என்பதனை ஒருவர் மறந்து விடாமல், அப்புடவையை உடுத்துவதில் பெருமை கொள்ளவேண்டும்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org

தொடர்பு: 09380949626




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாமசுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# கிளைகள் இல்லாமல் ஆலமரம் இல்லை

❖❖❖

ஏகாதிபத்திய எண்ணத்தை வெளியிடும் அறிக்கைகள் எவராலும் முற்றிலுமாக அறிக்கை கொடுத்து தள்ள முடிவதில்லை என்பதால் அதன் அடிப்படையிலே வெளிப்படுகின்ற ஒவ்வொன்றும் மறைமுகமாக திணிக்கப்பட்ட ஒரு கொள்கையாகும். இது இப்படி இருக்க கிளைகள் இல்லாமல் ஒரு ஆலமரம் என்பது உலகில் இல்லவே இல்லை. அரசர்களால் ஆளப்பட்ட நாடு என்பதும் மஹாராணிகளின் தலைமை கொண்ட நாடு என்பதும் இப்படிப்பட்ட திணிக்கப்பட்ட ஒரு கொள்கைக்கு ஆதாரமாகும். அதுவே அந்த நாட்டின் தன்மைப்பரம்பரை என்று சொல்லப்படுகிறது. இதற்கு உங்களுடைய பிரத்தியேகமான விளக்கம் என்னவென்று கேட்டால் நான் வேறொன்றும் சொல்வதிற்கில்லை. இது ஒரு ஏகாதிபத்திய கொடுமை ஆட்சியே ஆகும்.

❖❖❖

இங்கிலாந்து தேசம் இத்தகைய ஏகாதிபத்திய நாடு தான். இதனுடைய காலனி ஆதிக்கநாடுகள் ஒவ்வொன்றாக விடுதலை பெற்று வந்தன. அதிலே இந்தியாவும் மற்ற நாடுகளும் உண்டு. இருப்பினும் இராணியாரின் ஆதிக்க பாரம்பரிய நடைமுறையும் திணிக்கப்பட்ட கொள்கையும் ஒன்று என்றே கருத வேண்டும். இதை அந்நாட்டு மக்கள் ஒப்பு கொள்ளுகிறார்கள் என்றால் அது அந்த மக்களின் குணமாக இருக்கிறது. இது இப்படியிருக்க காலனி ஆதிக்க நாட்டின் ஜனநாயகம் என்பது ஒரு சாதாரண நடைமுறையே. இதை மிகப்பெரிய நடைமுறை என்று சொல்ல முடியாது.

❖❖❖

ஆளுகின்றவன், ஆண்டவன், ஆண்டு கொண்டிருக்கிறவன், ஆளப்படுகின்றவன் என்ற பாகுபாடெல்லாம்அந்த நடைமுறையில் ஒரு பெரிய இடிபாடே. இங்கெல்லாம் மக்கள் ஜனநாயகம் தழைத்த தில்லை. இந்தியா ஒருபோதும் இத்தகைய கொள்கையை ஆதரித்த தில்லை. இப்படிச்சொன்ன நமது தேசத் தந்தை மஹாத்மா காந்தியடிகள். ஒரு சாதாரண இந்தியன் மட்டும் அல்ல. அவர் ஒரு உலகமனிதன் என்றே சொல்ல வேண்டும்.

❖❖❖

ஜனநாயகம் கொள்கையளவில் எப்பொழுதுமே அகில உலக மனிதனைத் தான் ஒப்புக் கொண்டிருக்கிறது. அகில உலகத்தன்மை என்ற உணர்வு தான் விடுதலை இயக்கத்தின் சிந்தனை ஆகும். உரசி மோதுகின்ற சட்டதிட்டங்கள் மக்கள் ஜனநாயகத்தில் பிறப்பதில்லை.

❖❖❖

மேற்சொன்ன கொள்கைகளால் ஜனநாயகம் ஈடுஇணையில்லா சுதந்திரத்தை ஒவ்வொரு மனிதனுக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் அவரவர்களின் இஷ்டப்படி கை கால்களை வீசி நீட்டி மடக்க உதவி இருக்கின்றது. இதனால் அந்த நடைமுறை ஒவ்வொரு நாட்டிற்கும் மேலானது,

❖❖❖

கூர்ந்து குறிப்பாக ஆராய்ச்சி செய்தால் இயற்கையில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒரு ஜனநாயகவாதியே அல்ல. ஆயினும் அவர்கள் உலகில் ஜனநாயக எண்ணத்தையே விரும்புகிறார்கள்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

# வைரஸ் கிருமிகளை அழிக்கும் கோயில் வழிபாட்டு முறைகள்

தற்போது உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டிருப்பது கொரோனா... கண்ணுக்குத் தெரியாத ஒருசிறு கிருமியாக இருந்தாலும் இதற்கு உலகமே அஞ்சி நடுங்குகிறது.

ஐரோப்பாவில் குறிப்பாக இத்தாலியில் பலியெடுக்கின்றது கொரோனா.

கொரோனாவினால் அதிக உயிர்கள் பலியானது சீனாவில். இரண்டாவது இடத்தில் இத்தாலியும், மூன்றாவது இடத்தில் ஈரானும், நான்காம் இடத்தில் தென் கொரியாவும்உள்ளன.

இத்தாலியைத் தொடர்ந்து பிரிட்டன், ஸ்பெயின், ஜெர்மன் ஆகிய நாடுகளில் கொரோனா பரவிக் கொண்டிருக்கின்றது. தற்போது உலக நாடுகள் அனைத்திலும் தனது கொடூர பாதத்தை வைத்துள்ளது கொரோனா.

உலகின் பல பகுதிகளை அழிக்கும் அணு ஆயுதங்களை கண்டுபிடித்துவிட்டேன் அதனால் நான்தான் உலகின் மிகப்பெரிய வல்லரசு என்று மார்தட்டியவர்கள், இன்று அணுவைவிட சிறிய கிருமியான கொரோனா வைரஸ் முன் மண்டியிட்டு பயத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பது வேதனையான விஷயமாக இருந்தாலும். இதுவும் ஒரு படிப்பினையாகத்தான் எடுத்து கொள்ளவேண்டும்.

## இந்து மதம் காட்டிய வழி...

மூட நம்பிக்கை, மனித இனத்தில் பாகுபாடு என்று நாம் அலட்சியம் செய்ததை இன்று உலகமே கடைபிடிக்கிறது.

இந்து ஆலயங்களில் வழிபாட்டுக்கு முன்பு சம்பிரதாயபடி கால் கையினை கழுவிவிட்டுத் தான் உள்ளே செல்ல வேண்டும் என்றநடைமுறை இருந்தது, ஆனால் அதை தீண்டாமையின் உச்ச கட்டம், சக மனிதனை தொட்டால் தீட்டு என்று இந்து மதம் போதிப்ப தாக கூறி கிண்டலடித்த கூட்டம், இன்று சக மனிதர் களை தொடக்கூட அஞ்சுகிறது, அடுத்தவர் கைகள் பட்டுவிடுமோ என்று அஞ்சுகின்றது.

## கிருமிகளை தடுத்த நடைமுறை...

❖ கோவிலுக்கு செல்லும்முன் குளத்தில் கை, கால்களை நன்றாக நனைக்கவேண்டும். இதனால் நோய் பரவும் முதல் வழி தடுக்கப் படுகின்றது.

❖ ஆலயத்தில் சுவாமிக்குக் காட்டும் தீபத்தில் கையினை வைக்கும் பொழுதும், அக்கையினை கண்ணில் வைக்கும் பொழுதும் கிருமிகள் இருந்தால் அழிந்து விடும், கற்பூரம் ஏற்றி கண்ணில் ஒத்துவதன் உண்மைத் தத்துவம் இதுதான்.

❖ கையினால் முகத்தை தொடாதீர்கள், கண்ணை மூக்கை தொடாதீர்கள். அடிக்கடி கழுவுங்கள் என இப்போது உலகம் ஒப்பாரி வைக்கும் வேளையில்.... தீபச் சுடரில் கைகளை காட்டி சூடேற்று. அதை முகத்துக்கும் கொடு நோய் பரவாது என என்றோ சொன்ன மதம் இந்துமதம்.

❖ கர்ப்பக் கிரகத்தின் முன் வழிபாடு முடிந்ததும், கொடுக்கும் விபூதியினை நெற்றியில் பூசினால் நோய்க் கிருமிகள் முகத்தில் அண்டாது. அது கிருமி நாசினி, பசு சாண சாம்பல் இருக்குமிடம் கிருமிகள் வராது.

❖சாம்பிராணி புகையில் காற்றில் பரவும் கிருமிகள் அழிந்து விடுகின்றன. இதனால்தான் ஆலயத்தில் புகை பரப்பியதன் பயனும் அது தான். ஆலயமெங்கும் தீபம் ஏற்றப்படும் தத்துவமும் இதுவே, அதுவும் நெய்யிலும் இன்னும் சில எண்ணெயிலும் எரியும் நெருப்பு கொடுக்கும் சக்தி விஷேஷமானது.

❖ இவை அனைத்தும் வீட்டில் விளக்கேற்றி, சாம்பிராணி போட்டு, கற்பூர தீபம் காட்டி சுவாமியை வழிபடும் போது, வீடும் நோய்க் கிருமிகளிடம் இருந்து பாதுகாக்கப் படுகிறது.

❖ ஆலயங்களில் தரப்படும் சில பொருட்கள் கலந்த தீர்த்தம் மருத்துவ குணம் வாய்ந்தது, சர்வ கிருமி நாசினி, குடித்தால் தொற்று நோய் எளிதில் அண்டாது, அதை கைகளில் தேய்த்து



கொண்டால் நோய் தடுக்கப்படும்.

❖ கோயில்களில் பிரச்சாதம் என தரும் தேங்காய் முதல் மிளகு கலந்த பொங்கல் வரை எல்லாமும் மருந்தே.

❖ அது வைஷ்ணவ ஆலயமாக இருந்தால் துளசியும், அம்மன் கோவிலாக இருந்தால் கொடுக்கபடும் வேப்பிலையும் சிறந்த நோய் தடுப்பு மருந்துகள்.

❖ ஆலய மணி ஒலிக்க ஒலிக்க வழிபாடு நடத்துவது ஏன்? ஆலயமணியின் சில அதிர்வுகள் நுண்ணிய அதிர்வுகளை ஏற்படுத்தும் என்கின்றார்கள், மெல்லிய எலக்ட்ரிக் ஷாக் சிகிச்சைக்குரிய அதிர்வினை அது கொடுக்கும், ரத்த ஓட்டம் சீர்படும். இசை ஒலிக்கப்படும் தத்துவமும் இதுவே.

❖ கோவில் எல்லோரும் வரும் இடம். விக்கிரகங் களையும் ஐயரையும் எப்பொழுதும் மிகவும் சுத்தமாக இருக்கச் சொன்னார்கள். அர்ச்சகர் தள்ளி நிற்பதும் அதிகம் தொட்டுப் பேசாததன் காரணமும் இதுதான்.

❖மாமிச உணவு உடல் வெப்பத்தை கூட்டும். ஆலயங்களில் கூடுதல் வெப்பம் நிலவும் என்பதாலும் அசைவ உணவினை உண்டவர்க்கு ஆலயத்தில் அனுமதி இல்லை என்றார்கள்.

❖ அக்காலத்தில் விக்கிரகத்தை தொட்டு வணங்கும் வழக்கம் இருந்தது, பலர் தொட்டு செல்லும் நிலையில் நோய் பரவிவிட கூடாது என்பதற்காக அடிக்கடி நீரும் இன்னும் சில வஸ்துகளும் இட்டு கழுவி சாம்பிராணியிட்டு சுத்தமாக்கி வைத்தார்கள். கற்பூர தீ கூட கிருமி அழிக்கும் தன்மை கொண்டதே,

❖ திதி கொடுத்தல் இன்னும் சில விஷயங் களில் அர்ச்சகர் எமது கையில் தர்ப்பை கட்டு கின்றாரே ஏன்? தர்ப்பையில் நோய் கிருமி பரவாது என்பதை அன்றே அறிந்திருந்தது இந்து சமூகம்.

❖ இந்துக்கள் எதெல்லாம் செய்ய சொன்னார் களோ அதெல்லாம் நோய் தடுப்பென்றும், எதெல்லாம் தீட்டு என்றார்களோ அதெல்லாம் நோய் பரப்பும் விஷயம் என்பதை இப்போது மௌனமாக ஒப்புகொள்கின்றது உலகம்.

தொற்றுநோய் என புத்த விகாரை முதல் மேற்கத்திய தேவாலயம் வரை மூடப்பட்ட நிலையில், இந்து ஆலயங்களின் அன்றாட நிகழ்வுகளில் ஒழிந்திருக்கும் நோய் தடுப்பு முறையினையும் அக்காலத்திலே மிக நுட்பமாக செய்யபட்டிருக்கும் ஏற்பாடுகளையும் பற்றி வியந்து கொண்டிருக்கின்றது உலகம்.

இங்கு எதுவும் மூட நம்பிக்கை அல்ல, புரிந்து கொள்ள முடியாத மூடர்களின் கூட்டமே அப்படி சொல்லுமே அன்றி, அறிவுள்ள உலகம் நெருக்கடியான இந்நேரத்தில் இந்து ஆலயங்களின் பெருமையினை உணர்ந்து செயல் பட்டுக் கொண்டிருக்கின்றது.

# கிருமிகளை போக்கும் வழிமுறைகள்...

## சித்தர்களின் வழிமுறைகள்...

மனிதன் உட்பட எல்லா உயிரினங்களுக்கும் உயிர்த்திருக்க காற்றைப் போல உணவும் பிர தானம். இந்த உணவு அதை சரியான முறையில் எடுத்துக்கொண்டால் எந்தவித நோய் தொற்றும் ஏற்படாது.

இந்த உணவின் மகத்துவத்தைப் பற்றி சித்தர் பெருமக்கள் விரிவாகவே தங்களின் பாடல்களில் கூறியிருக்கின்றனர். இதற்கு உணவே மருந்து, மருந்தே உணவு என்ற முது மொழியை உதாரணமாகச் சொல்லலாம்..

நாம் உட் கொள்ளும் உணவானது நமது உடலில் எப்படிப் போய் சேர்கிறது என்பதைப் பற்றி அகத்தியர் தனது வல்லாதி எனும் நூலில் பின் வருமாறு கூறியிருக்கிறார்.



சொன்னோமே யின்னமொரு சூட்சங் கேளு
சொல்லுவேன் பொசித்ததெல்லா
மாறு பங்காய்
முன்னேதான் மலத்திலொன்று
மூத்திரத்தி லொன்று
மூளுமே தசையிலொன்று விந்தி லொன்று
தன்னேதான் மூளைதனி லொன்று சேரும்
சார்ந்திடுமே உதிரத்தி லொன்று மாக
மன்னேதான் சயகாச யேக ரோகி
வலுவான அதிசாரம் வந்த பேர்க்கே.

என்ற பாடலின் மூலம் தெளிவாக கூறியுள்ளார்.

அதாவது நாம் உண்ணும் உணவின் சாரமானது ஆறு பங்குகளாய் பிரிகிறதாம். அதில் ஒரு பங்கு கழிவாகி மலமாகவும், மற்றொரு பங்கு மூத்திரமாகி விடுகிறதாம். மீதமுள்ள நாலு பங்கில் ஒரு பங்கானது நமது தசையிலும், விந்து/நாதத்தில் ஒரு பங்கும், மூளையில் ஒரு பங்கும், நமது இரத்தத்தில் ஒரு பங்குமாகச் சேர்கிறதாம்.

இந்த விகிதங்களின் படி உணவின் சாரம் பிரிந்து வந்தால் உடல் ஆரோக்கிய மாக இருக் குமாம். இதில் ஏதேனும் மாறுதல் ஏற்படும் போதே நமது உடல் நலம் கெடுகிறது என்கிறார் அகத்தியர்.

கிராணி, குன்மம், எலும்புருக்கி நோய், சுரநோய் ஆகிய நோய்கள் உண்டாகும் என்கிறார். இதனால் உடலில் உள்ள விந்தும் அழிந்து விடுமாம். அப்போது மேலதிக நோய்களுக்கு ஆளாகி விடுவோமாம். இதனால் நாம் உட் கொண்ட உணவு அனைத்தும் வீணாகிவிடும் இதனால் நோய்தொற்று கிருமிகள் எளிதாக நம்மை தாக்கும் என்கிறார் அகத்தியர்.

எல்லாம் சரிதான், உணவின் சாரம் பிரியும் விகிதம் கெடும் போது அதை எப்படி சரி செய்வது?

அதற்கும் அகத்தியர் ஒரு தீர்வினை நல்கியிருக்கிறார். பூரண வல்லாதி சூரணத்தை பக்குவமாய் செய்து சாப்பிட்டு வர இந்தப் பிரச்சினைகள் நீங்கி உடல் ஆரோக்கியத்துடன் இயங்கிட முடியும் என்கிறார். சித்த மருத்துவர்களை அணுகினால் இந்தப் பூரண வல்லாதி சூரணம் தயாரித்துக் கொடுப்பார்கள்.

மேற்கண்ட உணவுமுறை கடைபிடித்தாலே எந்தவித வைரஸ் கிருமியும் அண்டாது.





# கிருமியை போக்கும் பவளமல்லி இலை...

நமது உடலின் மென்மையான பகுதிகளே பெரும்பாலும் வைரஸ் கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. பூஞ்சை, பாக்டீரியா, காளான் போன்ற பலவகையான நுண்கிருமிகளுக்கு அதற்கென சிறப்பாக வழங்கப்படும் நுண்கிருமி நாசினி பலனளித்தாலும், வைரஸ் கிருமியினால் ஏற்படும் தாக்குதலுக்கு மட்டும் சிறப்பான நுண்கிருமி நாசினிகள் இல்லை.

சளி, குருதி, குருதி படிந்த கருவிகள், உடல் திரவங்கள், இனப்பெருக்க திரவங்கள் ஆகியவற்றின் மூலம் வேகமாக பரவும் வைரஸ் கிருமிகள், குறிப்பிட்ட காலம் வரை காத்திருந்து வீரியம் பெற்றதும், அத்தியாவசிய உறுப்புகளை தாக்கி, பலவித நோய்களை ஏற்படுத்துகின்றன.

இதுபோன்ற கிருமிகளை அழிக்க அவசியம் குடிநீரில் துளசி இலை போட்டு குடிப்பது, மிளகு, சீரகம், போன்றவற்றை உணவில் அதிகம் எடுத் துக்கொள்வது அவசியம்.



பவள மல்லி இலைகளில் ஐந்தை எடுத்து 200மில்லி தண்ணீரில் கசக்கி போட்டு மிதமான சூட்டில் 100 மில்லியாக குறையும் வரை சூடுபடுத்தி, ஆறியபின் அந்த நீரை அருந்தினால் கொடிய வைரஸ்கள் எளிதாக நம்மை அண்டாது.

சளி, ஜூரம் போன்றவை இருந்தால் இந்த பவளமல்லி கஷாயம் மிகுந்த பலன் தரும்.

## மக்களை சிந்திக்கவைத்த கொரானா

- மரணத்தை ஞாபகம் செய்து உள்ளது
- சுத்தத்தை ஞாபகம் செய்து உள்ளது
- காய்கறி உணவுகளின் அவசியத்தை உணர்த்தியுள்ளது.
- ஒழுக்கத்தை கற்று கொடுத்திருக்கிறது
- தீய வழிகளில் செல்வதை தடுத்துள்ளது.
- கேளிக்கைகளில் மக்கள் மனம் அண்டவிடாமல் தடுத்துள்ளது.
- தர்மம் என்றும் நிலையாது என்பதை உணர்த்தியுள்ளது.
- பொதுநலத்துடன் அடுத்த வீட்டில் இருப்பவருக்கு நோய் வரக்கூடாது என்று மனதார வேண்ட வைத்துள்ளது.
- இறைவன் ஒருவனாலேயே இந்த உலகை ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் என்பதை ஒப்புக்கொள்ளவைத்துள்ளது.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

## உலக வரலாற்றில் முதன் முறையாக










# இலவச e-mail-book

**எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக பெற**

**உங்கள் இ-மெயில் முகவரியை**

**கீழ்காணும் வாட்சப் எண் அல்லது இமெயில் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்**

# 8825844033

## aanmeegamalar@gmail.com

**முடிந்த அளவு Share செய்து எங்கள் பணிக்கு உதவுங்கள்**